கைந்நிலை

அம்சவேணி பெரியண்ணன்



கைந்நிலை

(மூலமும் - எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானாதெரு, பாண்டி பஜார்

தலைமை அஞ்சலகம் அருகில்

தியாகராய நகர், சென்னை – 600 017.

தொலைபேசி – 044 42070663

◆ கைந்நிலை ◆ அம்சவேணி பெரியண்ணன் ◆ பதிப்பு 2022 ◆ 56 பக்கங்கள் ◆ வெளியீடு: வனிதா பதிப்பகம், 11, நானா தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை - 600 017, போன்: 044 - 42070663 ◆ ஒளிஅச்சு: செல்லம் கிராபிக்ஸ், சென்னை-94 ◆ அச்சிட்டோர்: அம்சா ஆப்செட், சென்னை.

விலை ரூ.50/-

பதிப்பாளர்: பதிப்பகத் திலகம் **பெ.மயிலவேலன்,**
M.Sc., M.Ed., M.Phil., Ph.D.

◆ **KAINILAI** ◆ **HAMSAVENI PERIANNAN** ◆ Edition 2022 ◆ 56 Pages ◆ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazzar, T.Nagar, Chennai - 600 017, Ph: 044 - 42070663 ◆ Typeset: Chellam Graphics, Chennai - 600 094. ◆ Printed at: Hamsa Offset, Chennai.

Price : Rs.50/-

PUBLISHER: Pathippaga Thilagam **Dr. P.MAILAVELAN,**
M.Sc., M.Ed., M.Phil., Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

"நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கைந்நிலை என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமையாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதி யுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

❑ ❑ ❑

கைந்நிலை

விளக்கவுரை

குறிஞ்சி

தினைப்புனத்தில் சேர்ந்தோம்

1. நுகர்தல் இருவரும் கிளிகடி ஏனல்
நிகரில் மடமான் தெரியும் அம்...சாரல்
கானக நாடன் கவந்தான் இலன் என்று
மேனி சிதையும் பசந்து.

விளக்கவுரை

தினைபுனத்தில் முற்றிய கதிர்களை கொதி திண்பதற்காக கிளிகள் வரும். அவற்றை விரட்டும் காவலில் இருந்தேன் நான். எழில் மிகுந்த இளமான்கள் துள்ளி விளையாடுகின்ற அந்த அழகிய மலைச் சாரலில்தான் மலைநாட்டுத் தலைவன் என்னிடம் வந்தான். கூடி இன்புற்றான். அந்த குறிஞ்சி நிலத் தலைவன் இங்கு இல்லை. ஆகவே, என் உடலில் பசலை படர்ந்து அழகு கெட்டது என்று தலைவி கூறுகிறாள். கைந் நிலையின் ஆசிரியரும், புலவருமாகிய புல்லங்காடனார் தலைவியின் பிரிவு துயரத்தை இப்பாடலில் விளக்குகிறார்.

காதல், மானம், வீரம் ஆகியவை தமிழர் பண்பாட்டில் இணைந்தவை. உண்மையான காதல் இருக்கும் இடத்தில் தன்மானம் இருக்கும். தன்மானம் உடையவன் வீரனாகவே இருப்பான். அந்த தமிழர் பண்பாட்டில் முதலில் இடம் பெறும் காதலை, தலைவன்... தலைவியின் நிலைப்பாட்டை இப்பாடல் மூலம் அவர் உணர்த்தியிருக்கிறார்.

அருஞ்சொற்பொருள்

நுகர்தல்-புரிதல். இவரும்-விரும்புகின்ற. கடி-காவல். ஏனல்-தினைப்புனம். நிகரில்-ஈடு இணையற்ற. மடமான்-இனமான். நெரியும்-துள்ளும். கானகம்-குறிஞ்சி நிலம். மேனி-உடம்பு. சிதையும்-அழகு கெடும். பசந்து-பசலை நிறம் கொண்டு.

தோழி... என் தலைவன் வருவானோ?

2. வெந்த புனத்துக்கு வாசம் உடைத்தாகச்
சந்தனம் ஏந்தி அருவி கொணர்ந்திடூஉம்
வஞ்ச மலைநாடன் வாரான்கொல்! தோழி!என்
நெஞ்சம் நடுங்கி வரும்.

விளக்கவுரை

தினைப்புனம் தீய்ந்து கருகி விட்டது. அந்த நாற்றம் நீங்கி மணம் தருவதற்காக அருவிகள் சந்தக் கட்டைகளை அடித்துக் கொண்டு இங்கு வருகின்றன. வஞ்சக மனமுடைய மலைநாட்டுத் தலைவன் வருவானா தோழி...? இல்லை வராமலேயே இருந்து விடுவானா...? என் மனம் நடுங்குகிறது என்கிறாள் தலைவி. தினைப்புனம் கருகிய நிலையில் அங்கு ஓடும் அருவிகள் சந்தக்கட்டைகளை கொண்டு வந்து சந்தன மணம் கமழும்படி செய்கின்றன என்று அற்புதமான கற்பனை நயத்தைக் கையாண்டிருக்கிறார் ஆசிரியர். தலைவன் வரவில்லை என்ற பொய் கோபத்தில் வஞ்சக மனம் கொண்ட தலைவன் வராமலேயே இருந்து விடுவானோ என்று அவள் ஏங்கித் தவிப்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

புனம்-தினைக் கொல்லை. வஞ்ச-கள்ள மனம். நடுங்கி-வருத்த முற்று.

ஆசையில் அவதிப்படும் மனம்

3. பாசிப் பசுஞ்சுனைப் பாங்கர் அழிமுதுநீர்
காய்சின மந்தி பயின்று கனிசுவைக்கும்
பாசம்பட்டு ஓடும் படுகல் மலைநாடற்கு
ஆசையின் தேம்பும்என் நெஞ்சு.

விளக்கவுரை

பசுஞ்சுனையில் பாசி படர்ந்துள்ளது. பக்கத்தில் பெருகியுள்ள நீர் பெருக்கில் அழுந்தி கிடக்கின்ற கோபம் கொண்ட ஆண் குரங்குகள் அங்கு அடித்து வரப்பட்டிருக்கும் பழங்களை உணர்கின்றன. இதனையெல்லாம் காணும்போது என் தலைவன் நினைவுதான் வருகிறது. பாசம் கொண்ட இந்த அருவிகளுக்கும் பாறைகளுக்கும் மன்னன் அல்லவா என் தலைவன். அவன்மேல் வைத்து ஆசையால் என்மனம் தவிக்கிறதடீ.. தோழி என்று தலைவி கூறுவது இப்பாடல் விளங்குகிறது.

அருவிகள்... மலைகள் ஆகியவற்றை காணும்போதெல்லாம் அதன் அரசனான தலைவன் நினைவே தலைவிக்கு வருகிறது. ஒரு ஆணின் மீது பெக்ள் ஆசை வைத்து விட்டால் காணுகின்ற காட்சியெல்லாம் அந்த தலைவனாகவே தெரியும் என்பதாகும்.

அ.பொ.

பாங்கர்-பக்கம். அழி-பெருகும். காய்-மிகுந்த. சினம்-வெறுப்பு. மந்தி-ஆண் குரங்கு. பயின்று-கிடந்து. பாசம்-பாசி. படுகல்-நீரோடும் பாறைக்கல். தேம்புதல்-வருந்துதல்.

சொன்னது பொய்தானோ தோழி?

4. ஓங்கல் விழுப்பலவின் இன்பம் கொளீஇய
தீங்கனி மாவின் முசுப்பாய் மலைநாடன்
தான்கலந்து உள்ளாத் தகையனோ நேரிழாய்
தேம்கலந்த சொல்லின் தெளித்து.

விளக்கவுரை

மலை உச்சியில் உள்ள பலாமரத்தில் பழுத்து தொங்கும் சுவைமிக்க பலாய் பழங்களின் சுவைகளை உண்டு மகிழ குரங்குகள் விரும்புகின்றன. அதனால் இனிய சுவை புரிய ககைகள் நிறைந்த மாமரத்திலிருந்து பலாமரத்துக்கு தாவுகின்றன. அத்தகைய வளமுள்ள நாட்டுக்கு தலைவனை

மலை மன்னன் அன்பால் கூற மகிழந்திருந்தபோது தேன் போல் இனியசொற்களையெல்லாம் கூறினானே... அவற்றை யெல்லாம் நினைத்துப் பார்க்கும் நிலையில் தலைவன் இல்லை போலும் தோழீ என்கிறாள் தலைவி. தன்னை வந்து காணா திருக்கும் தலைவன் வேல் பொய் கொண்டு இப்படி கூறு வதை சித்தரிக்கும் பாடல் இது. உண்மையான அன்புக்கு மகத்தான சக்தி உண்டு. காதலுக்கும் அத்தகைய மகத்தான சக்தியுண்டு. ஆனால் உண்மையான அன்பு பல அற்புதங் களை நிகழ்த்தக்கூடியது அதனால்தான் தலைவன். தலைவி. பிரிவு துன்பத்தை கைநிலை நூலான தந்திருக்கிறார் புலவர் புல்லங்தாடனோர் இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

ஓங்கல்-மலை. விழு-சுவையான. கொளீஇய-கொள்ள. முசு-கருங்குரங்கு. பாய்-தாவும். உள்ள-நினையாத. தகைமை-குணம். தேம்-தேன்.

நான் நரகமா... அவருக்கு...?

5. இரசம் கொண்டு இன்தேன் இரைக்கும் குரலைப்
பிரசை இரும்பிடி பேணிவரூஉம்
முரசருவி ஆர்க்கும் மலைநாடற்கு என்தோள்
நிரயம் எனக்கிடந்த வாறு.

விளக்கவுரை

தேன் உண்ட இன்பத்தில் வண்டுகள் திளைக்கின்றன. அந்த வண்டுகளின் இன்னொலி கேட்டு தேன்கூடியிருக்கும் முரசு போல் அருவி முழக்கமிட்டு ஓடிவரும். கரிய பெண் யானைகள் வரும் மலைநாட்டுத் தலைவனுக்கு என்னிரு தோன்றும் நாகம் போல் தோன்றுகிறது போலும். தலைவ னின் பாராமுகம் கண்டு வருந்தும் தலைவி இப்படியெல் லாம் கூறி புலமபுகிறான். தலைனின் பாராமுகத்தால் தலைவிக்கு இப்படிப்பட்ட கற்பனைகள் தோன்றுகின்றன. தலைவனை பிரிந்திருக்கும்போது தலைவி கூறுபவைகள்

கோபம் தாபம். பல வகைகளில் வெளிப்படும் தலைவனை நேருக்கு நேராக கண்டு விட்டால் இவையெல்லாம் பறந்து போகும். உண்மையான அன்பு என்பது இப்படியெல்லாம் இருக்கும் என்று ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

அ.பொ.

இரசம்-தேன். இன்தேன்-இனிய தேன் வண்டுகள். இசைக்கம்-ஒளி எழுப்பும். பிரசை-தேன் கூட்டை பேணி-அடைய விரும்பி. ஆர்க்கும் ஒலிக்கும். நிரயம்-நரகம்.

தலைவன் தடமார்பு தாங்கும் என் நெஞ்சு

6. மரைஆ உகளும் மரம்பயில் சோலை
உரைசால் மடமந்தி ஓடி உகளும்
புரைதீர் மலைநாடன் பூண்ஏந்து அகலம்
உரையார் வழங்கும் என்நெஞ்சு.

விளக்கவுரை

காட்டுப் பசுக்கள் சுற்றித்திரியும் மரங்கள் நிறைந்த சோலை அந்த சோலை மரங்களில் புகழ்ந்து பேசப்படும் இலை குரங்குகள் மரத்துக்கு மரம் தாவி திரிகின்றன. இத்துஜண வளம் நிறைந்த குறை கூற முடியாத மலை நாட்டு தலைவனின் பொற்பூண் அணிந்த மார்பானது என் மனதில் நடை பயில்கிறது என்று கைந்நிலை கூறுகிறது.

தலைவியின் கற்பனையில் தலைனே திகழ்கிறான். சோலை, செழிப்பு ஆகிய எல்லாவற்றிலும் தலைவனின் உருவத்தையே கற்பனை செய்கிறாள் தலைவி. இந்த் காதல் வேகம் மனிதனுக்கு தேவை. பெண்களுக்கும் தேவை. இந்த உண்மையான காதல் வேகம் கொண்டவர்கள் எந்த துரை யில் கவனம் செலுத்தினாலும் அதில் சித்தி பெறுவார்கள். உண்மையா காதல் போல் கொண்டவர்களுக்கு தெய்வீக சக்திகள் சேருகின்றன என்பதும் உமை. இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அயர்ந்துள்ளது.

அ.பொ.

மரைஆ-காட்டுப் பசு. உகளும்-திரிகின்ற. பயில்-விளங்கும். உரைசால்-சிறப்புடைய. மடமந்தி-இளம் குரங்கு. புனைதீர்-குற்றமில்லாத. பூண்-பொற்பூண். ஏந்து-அணிந்த. அகலம்-மார்பு. உரையா-உரைத்துக் கொண்டு சென்று. வழங்கும்-இருக்கும்.

தலைவன் நினைவால் கைவளை நழுவும்

7. கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை
எல்உறு போழ்தின் இனிய பழங்கவுள்கொண்டு
ஒல்என ஓடும் மலைநாடன் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை.

விளக்கவுரை

பகல் நேரத்தில் மலைப் பாறைகளில் ஆண் குரங்குகள் ஏறி விளையாடுகின்றன. அங்குள்ள வழை மரத்தின் சுவையானப் பழங்களைப் பறித்து கன்னத்தில் அடக்கிக் கொண்டு ஓடுகின்றன. இத்தகைய வளமுள்ள மலைநாட்டு தலைவன் என்னிடம் கொண்ட உறவினர், இனிமையை சொல்லும் போதெல்லாம் என் கை வளையல்கள் நழுவி விழுகின்றன. தோள்கள், கைகள் இணைக்கின்றன என்று தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

எல்லா நோயைவிட காதல்நோய் பொல்லாதது என்று சொல்வார்கள். உடல் மெலியும் வாய் சொற்கள் தடுமாறும் பசலைப் படரும். இதற்கான ஒரேமருந்து தலைவனுடன் கூடுதலே ஆகும். ஆண், பெண் இரு சாராருக்கும் ஆசை இருக்கும்வரை இந்த துன்பம் தொடர்கதைதான். இந்த ஆசைக் கறைகள் அனைத்தும் முதுமை வந்ததும், மரணம் வந்ததும் அழிந்தபோதும் என்ற ஞானம் வந்துவிட்டால் இந்த காதல் வேகம் இறைவன் மீது ஏற்படும் பற்றாக மாறும் ஒரு கட்டத்தல் எல்லோரும் இந்த நிலையை அடையத்தான் போகிறார்கள் என்பதால் கைந்நிலை விளக்கவுரையில் ஆங்காங்கே இந்த ஞானக்குவியலை இணைந்திருக்கிறோம்.

அ.பொ.

கள்வரை ஏறி கடுவன் களிவாழை-பாறைக் கல்களுடைய மலை மீதேறி ஆண் குரங்கு வாழை மரத்தின். எல்உறுபோழ்தின் இனிய பழம் கவுன் கொண்டு-பகல் பொழுதில் இனிய பழங்களைக் கன்னத்தில் அடக்கிக் கொண்டு. ஒல் என ஓடும் மலைநாடன் தன் கேண்மை-விரைந்து ஓடும் மலை நாட்டுத் தலைவன் தன உறவை. சொல்லச் சொரியும் வளை-சொலலுந் தோறும் கை வளையல்கள் கழன்று விழுகின்றன.

தலைவி நோய்க்கு தலைவனே மருந்து

8. கருங்கைக் கதவேழம் கார்ப்பாம்புக் குப்பம்
கி...க்...கொண கரும்
பெருங்கல் மலைநாடன் பேணி வரினே
சுருங்கும் இவள்உற்ற நோய்.

விளக்கவுரை

கரிய நீண்ட துதிக்கை உடைய சினம் கொண்ட யானை, மற்றும் கரிய பெரிய கருங்கல் பாறைகள் அருகில் இருக்கும் மலை நாட்டுத் தலைவன் விரும்பி வந்தால் இவன் உடலில் தோன்றிய பசலைப் படர்தலான நோய் துன்பம் நீங்கும் தோழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

கொழுந்து விட்டு எரியும் நெருப்பு அணைய வேண்டு மானால் நீரை கொட்ட வேண்டும். தலைவன் நினைவில் தீபோல் விளங்கும் நோய் தணிய தலைவன் என்கிற நீர் தலைவியை நனைத்திடவேண்டும். இச்சிந்தனைகளை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கருங்கை-கரிய துதிக்கை. கதம்-கோபம். வேழம்-ஆண் யானை. கார்-கரிய. பெருங்கல்-பெரிய மலை. பேணி-விரும்பி. சுருங்கும்-குறையும். உற்ற-அமையப் பெற்ற.

நான் கசந்தேனோ தலைவனுக்கு?

9. காந்தள் அரும்புகை என்று கதவேழம்
ஏந்தல் மருப்பிடைக் கைவைத்து இனன்நோக்கிப்
பாய்ந்து எழுந்து ஓடும் பயமலை நல்நாடன்
காய்ந்தான் கொல் நம்கண்கலப்பு.

விளக்கவுரை

செங்காந்தள் மலர்கள் பூத்துக் குரங்குகின்றன. அப்பூக்களை தீப்பொறி என்று தவறாக நினைத்த சினம் கொண்ட யானை தன் குதிக்கையை வளைக்கிறது. கொம்புகளுக்கிடையே அதை வைக்கிறது. தன் இனமான மற்ற யானைகள் பக்கம் பயந்து ஓடுகிறது. அத்தைய அச்சம் தரும் மலைகளுடைய நாட்டின் தலைவன் என்னுடன் கூடியிருக்கும் இன்பத்தை வெறுத்து ஒதுக்கி விட்டானா? நாள் கசந்து போனேனோ? என்ற பொருளில் தோழியிடம் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

காந்தள்-செங்காந்தன் மலர். அரும்புகை-அரிய புகை நெருப்பு. கதம்-சினம். வேழம்-ஆண் யானை. ஏந்தல்-உயர்ந்த. மருப்பு-கொம்பு. கை-துதிக்கை. இசை-கூட்டம்.

காதலன் வரும்போது கண் துயிலுமா...?

10. பொன்இணர் வேங்கைப் புனம்சூழ் மலைநாடன்
மின்னின் அனையவேல் ஏந்தி இரவினுள்
இன்னே வரும் கண்டாய் தோழி இடையாமத்து
என்னை இமை பொருமாறு.

விளக்கவுரை

தங்க நிறம் கொண்டு கொத்து கொத்தாய் பூக்கும் காடுகள் நிறைந்த குறிஞ்சிக்கு தலைவன் என் காதலன். மின்னல்போல் ஒளி வீசும் வேல் ஏந்தி இந்த நள்ளிரவிலேயே அவள் வருவாய் பார்த்துக் கொள். தோழியே... அவள் வரும் நேரம் என் கண் எப்படி தூங்கும்...? தூக்கம்

வருமா...? என்ற பொருளில் தலைவி தோழியிடம் கூறுவது போல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவன் தன்னைவிட்டு பிரிந்து போனாலும் அவன் மனநிலையை தலைவி நன்கு அறிவாள் என்பதை இப்பாடல் கோடிட்டு காட்டுகிறது. தலைவன்... தலைவி ஆகிய இருவர் மனங்களும் ஒன்றோடொன்று கலந்து விட்ட பிறகு அங்க தெய்வீகம் அரும்புகிறது. இந்த காதல் வேகத்தை எந்த துறையில் செலுத்தினாலும் வெற்றி பெறும் என்பதை விளக்கவுரையில் கூற கடமைப்பட்டிருகிறோம்.

அ.பொ.

இணர்-கொத்து. வேங்கை-வேங்கை மரம். புனம்-காடு. மின்னின் அனைய-மின்னைப் போன்ற. இடை யாமம்-நள்ளிரவு. என்னை-எவ்வாறு. இடை-கண்ணிமை. பொருமாறு-இணைவது.

வருதல் குறைந்தது... பேச்சும் குறைந்தது

11. எறிகிளர் கேழல் கிளைத்திட்ட பூமி
பொறிகிளர் மஞ்ஞை புகன்று குடையும்
முறிகிளர் நன்மலை நாடன் வருமே
அரிதுரைத்து இவ்இல்லில் தமக்கு.

விளக்கவுரை

பன்றிகள் தம் கொம்புகளால் குத்தி கிளறிய புழுதியில் புள்ளிகளை உடைய மயில்கள் விருப்பத்துடன் ஓடி.. ஆடி... விளையாடுகின்றன. தளை இலைகள் தழைத்த மரங்கள் சூழ்ந்த குறிஞ்சி நிலத் தலைவன் நம் வீட்டிற்கு வருவது குறைந்து விட்டது. பேசுவதும் அளவோடு இருக்கிறது. தோழி... இந்த மனமாற்றத்திற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியவில்லையே என்று கலங்குவதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

தலைவன் வருகிறான். முன்புபோல் அடிக்கடி வருவதில்லை. தலைவன் பேசுகிறாள் முன்பு போல் நீண்ட நேரம் பேசுவதில்லை. இது தலைவியின் கவலை. வேலை பளு

காரணமாக தலைவன் இப்படி நடந்து கொள்ளலாம். ஆனால், தலைவிக்கு இதை சரியாப் புரிந்து கொள்ளாத கவலை. பெண்கள் எப்போதும் சஞ்சலகுணம் கொண்டவர்கள் என்பது இயல்பானது. தலைவியும் இதற்கு விதிவிலக் கல்ல... என்பதை கைந்நிலை உணர்த்துகிறது. இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

எறி-குத்தி. கிளர்-மேலெழுப்பிய. கேழல்-பன்றி. கிளைத்திட்ட-பரப்பிய. பூழி-புழுதி. பொறி-புள்ளி. கிளர்-விளங்கும். மஞ்ஞை-மயில். புகன்று-விரும்பி. அரிது-அரிதாக. உரைத்து-பேசி. இல்-வீடு.

தலைவி உயிர் காக்க தலைவன் வருவான்

12. நாக நறுமலர் நாள்வேங்கைப் பூவிரவிக்
கேசம் அணிந்த கிளர்எழிலோள் ஆகம்
முடியும் கொல் என்றுமுனிவான் ஒருவன்
வடிவேல் கைஏந்தி வரும்.

விளக்கவுரை

நறுமணம் மிக்க புன்னை மலர்களில் அன்றயர்ந்த வேங்கை மலர்களையும், ஒன்றாக கட்டி தன் கூந்தலில் அணிந்திருக்கிறாள் தலைவி. அத்தகைய அழகு தலைவி தன்னைக் காணாத துயரத்தில் அழிந்து விடுவாளோ என்று மனம் கலங்குகிறாள் தலைவன். ஆகவே, தன் உயிரை ஒரு பொருட்டாக கருதாமல் தனி வழியே வேல் ஏந்தி தலைவன் வருவான் என்பதை உணர்த்தும் பாடல் இது. தலைவி எவ்வாறு தலைவனை நினைத்து ஏங்குகிறாளோ அதே போல் தலைவனும், தலைவியின் உயிர்காக்க விரும்புவான் என்பதை இப்பாடல் அறிவிக்கிறது.

அ.பொ.

நாகம்-புன்னை. நறுமலர்-மணமுள்ள பூ. வேங்கை-வேங்கை மலர். விரவி-கலந்து. கேசம்-கூந்தல். கிளர்-விளங்கும். எழிலாள்-அழகுடையவள். ஆகம்-உடம்பு, முனிவான்-வெறுத்தவன்.

பாலை

குறிஞ்சியும் முல்லையும் இயல்பில் திரிந்து பாலையாகும்

காடு செல்லும் வழி அறிந்து கலங்கிய தலைவி

1. கடுகி அதர் அலைக்கும் கல்சூழ் பதுக்கை
விடுவில் எயினர்தம் வீளை ஓர்த்து ஓடும்
நெடுவிடை அர்த்தம் செலவு உரைப்பக் கேட்டே
வடுவிடை மெல்கின் கண்.

விளக்கவுரை

காடுவழி செல்வோரை பொருள் பறிக்கும் கள்வர்கள் வழி மறிப்பார்கள். கற்களும், பாறை குன்றுகளும் நிறைந் திருக்கும் பாதை அது. அங்கு வாழும் வில்லேந்திய வேடர்கள் எழுப்பும் கீழ்க்கை ஒலிகேட்டு பெரிய காட்டெருமைகள் பயந்து ஓடும் கொடிய பாலை நில பாதை வழி அது. இதனை கேட்டாலே தலைவியின் மாவடு பிளந்தது போன்ற இரு வழிகளிலிருந்து பெரிதாக கண்ணீர் வரும். பொருள் தேடி தலைவன் பயணம் மேற்கொள்ளும்போது தலைவியின் இந்த நிலையை விளக்குகிறது இப்பாடல்.

தலைவனை பிரிவது ஒரு துன்பம். ஆபத்தான காட்டு வழியில் தலைவனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் ஏற்பட்ட துயரம் மறுபுறம். பழங்காலந்தொட்டே பெண்கள் தலைவன் பிரிவை தாங்க முடியாமல் கண்ணீர் சிந்தியவர்கள் என்பது இதன் மூலம்

அறியப்படுகிறது. இந்த அன்பு, பாசம் அக்காலத்தில் இருந்தது. இக்காலத்தில் அது குறைந்திருப்பதையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். பணத்திற்கு முதன்மை கொடுக்கும் இக்காலத்தில் பெண்கள், ஆண்கள் அனைவரும் இந்த இலக்கியத்தை படிக்க வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கடுகி-விரைந்து. அதர்-வழி. அலைக்கும்-வருத்தும். பதுக்கை-பாறை. எயினர்-வேடர். வீளை-சீட்டி ஒலி. ஓர்த்து-கேட்டு. நெடுவிடை-பெரிய காட்டு எருது. வடு-மாவடு.

இதுவுமது

2. சுதநாய் துரப்ப.....
.... அமிழும்
புதல்மாறு வெங்கானம் போக்குரைப்ப நில்லா
முதல்.................................... .

விளக்கவுரை

சினம் கொண்ட நாய்கள் துரத்தும் புதர் மண்டிய பாலை நிலப் பாதையில் நீ போவதைச் சொல்ல. பாலை நில காடு வழியே செல்லும்போது வரும் இடையூறுகள் 'இதுவுமது' என்ற தலைப்புகளில் விளக்கப்படுகின்றன. நாய்கள் இயல்பாகவே குலைக்கக் கூடியவை. கோபம் கொண்ட நாய்கள் குலைப்பதோடு கடிப்பதற்கு முயற்சி செய்யும். இது போன்ற ஆபத்தான வழியில் தலைவன் பயணம் செய்யவேண்டும். தலைவனுக்கு எந்தவித ஆபத்தும் வந்து விடக்கூடாதே என்று தலைவி அஞ்சுகிறாள். ஆதங்கம் கொள்கிறாள். தடைக் கற்களை யெல்லாம் படிக்கட்டுக் களாக்கித்தான் அக்காலத் தமிழர்கள் பொருள் ஈட்ட சென்றார்கள் என்பதும் இதன் மூலம் அறியப்படுகிறது.

அ.பொ.

கதம்-கோபம். புதல்-புதர்.

இதுவுமது

3. ....
....
கடுங்கதிர் வெங்கானம் பல்பொருட்கண் சென்றார்
கொடுங்கல் மலை.

விளக்கவுரை

சூரிய வெப்பக் கதிர்கள் அலை மிகுந்த கொடிய பாலை வனப் பாதை வழியே பலவகைப் பொருக்ளை அடையச் சென்றவர்கள பலர். வளைந்த பாறைகளையுடைய மலையும் அப்பாதையில் உண்டு என்று கைந்நிலை கூறுகிறது. தியாக மின்றி எதையும் பெறமுடியாது உயிரை துச்சமென மதித்து கடலில் மூழ்கினால்தான் முத்துக்களைப் பெறமுடியும். அதேபோல் பொருள் தேடி செல்பவர்கள் பாலை நிலத்து அனல் மற்றும் பல இடையூறுகளை கடந்துதான் ஆகவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

கடும்-மிகுந்த. கனல்-வெப்பம். கொடும்-வளைந்த. கல்-பாறை.

இதுவுமது

4. .... உறையும் மெல்லென் கடத்துக்
கடுஞ்சின வேங்கை கதழ்வேழம் சாய்க்கு
....
.... நமர்.

விளக்கவுரை

வாழும் மென்மையான பாலை நிலப்பாதையில் மிகுந்த கோபம் கொண்ட வேங்கைப் புலி, கடும் சினமுடைய யானையை வீழ்த்தும்... நம் தலைவர் என்ற பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

பொருள் தேடி செல்லும் பாலை வழிபாதையில் வேங்கைப் புலி, கடும் சினமுடைய யானை போன்ற மிருகங்களால் ஆபத்து உண்டு. இந்த ஆபத்துக்களை யெல்லாம்

முறியடித்து. (எதிர் வரும் மிருகங்களை யெல்லாம் வீழ்த்தி) பயணத்தைத் தொடர்ந்தார்கள். வீரத் தமிழர் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது. அந்த வீரம்... மானம் இன்றைய காலகட்டத்தில் மங்கியபோதும் முழுவதுமாக மறைந்து போகவில்லை என்பதையும் சொல்லலத்தான் வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந் துள்ளது.

அ.பொ.

உறையும்-வாழும். கடம்-பாலை நிலப்பாதை. சினம்-கோபம். கதழ்-சினம். வேழும்-ஆண் யானை. சாய்க்கும்-வீழ்த்தும். நமர்-நம் தலைவர்.

இதுவுமது

5. கடமா இரிந்தோடும் கல்அதர் அத்தம்
மடமா இரும்பிடி வேழமரு..........
.... உண்கண்ணுள் நீர்
....

விளக்கவுரை

கடமான்கள் அஞ்சி ஓடும் பாறைக் கற்கள் நிறைந்த பாலைவனப் பாதையில் இளமையான கருநிறம் கொண்ட பெண் யானைகள்... கூட மை உண்ட கண்கள் கண்ணீரைச் சிறிதும் என்ற பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

'இதுவுமது' என்ற தலைப்பில் இதுவரை பாலைவனப் பாதையில் செல்லும்போது ஏற்படும் இடையூறுகள் பற்றி கூறப்பட்டது தலைவன் தலைவியை பிரிந்து செல்வது ஒருபுறம்... அப்படி செல்லும்போது உயிருடன் மீண்டு வரவேண்டும் இது மறுபுறம் இதனை யெல்லாம் எதிர் கொண்டு வெற்றிக் கொடி நாட்டினார்கள் தமிழர்கள் காதல்... மானம்... வீரம் ஆகிய மூன்று பண்புகளுடன் நம் முந்தைய தமிழர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் வழியில் வந்த வர்கள்தான் நாமும். இதனை சிந்தித்து செயல்படவேண்டும் என்பது கருத்து. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

இரிந்து-பயந்து. கல்-பாறை. அத்தம்-பாலைநில வழி. மடமா-இளமை பொருந்திய. இரும்பிடி-கரும் பெண் யானை. வேழ மரு-ஆண் யானையை விரும்பி.

பல்லி சொல்வது பலிக்கும்

6. ஆமா சிலைக்கும் மணிவரை ஆரிடை
ஏமாண் சிலையார்க்கு இனமா இரிந்தோடும்
தாம்மாண்புஇல் வெஞ்சுரம் சென்றார் வரக்கண்டு
வாய்மாண்ட பல்லி படும்.

விளக்கவுரை

காட்டுப் பசுக்கள் களைத்து குரல் எழுப்புகின்றன. அந்த மலை பக்கத்தில் அம்புகளுடன் கூடிய சிறந்த வில்லினை கொண்டிருக்கும் வேடர்களைப் பார்த்து விலங்கு கூட்டங்கள் பயந்து ஓடுகின்றன. தனக்கென்று தனி சிறப்பு எதுவும் இல்லாத கொடிய பாலை நிலத்தில் ஆன பாதையில் பொருள் தேடி சென்றார் தலைவர். அவர் நலமுடன் திரும்பிவரப் போகிறார் என்பதை. நல்ல செய்திகளை முன்கூட்டிச் சொல்லும் பல்லி ஒலி செய்கிறது. ஆகவே, வருந்த வேண்டாம் என்று தலைவியை தோழி தேற்றுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

பல்லி சொல்வதை நம்பிக்கையோடு ஏற்கும் பழக்கம் பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. அனுபவத்தில் இந்த உண்மையை மனிதர்கள் கண்டதால்தான் இதில் ஆழமான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஜோதிடம் கணிப்பவர்கள்கூட பிறந்த தினம், நட்சத்திரம் ஆகியவைகளை ஒப்பிட்டுப் பார்த்து தான் ஜோதிட சாஸ்திரத்தை வகுத்தார்கள் பிரபலமாக வாழ்ந்தவர்கள் ஜாதகங்கள், சாதாரணமாக வாழ்ந்தார்கள் ஜாதகங்களை ஒப்பிட்டுப் பார்த்து சில ஒற்றுமைகளைக் கண்ட பிறகுதான் ஜோதிடக் கலைத் தோன்றியது. ஆனால், இந்தக் கணக்குகள் சரியாகத் தெரியாத சிலர் மனம்போனபோக்கில் ஜோதிடம்கூறி மக்களை குழப்பத்திற் குள்ளாக்குகிறார்கள் என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

அதேபோல் பல்லி எந்த திசையில் சொல்கிறது? எந்த காலத்தில் சொல்கிறது? அப்படி சொல்வதால் நன்மையா...? தீமையா? என்பதை பலமுறை ஒப்பிட்டுப் பார்த்துதான் இதை நம்பிக்கையாக கொண்டிருக்கவேண்டும். அந்த முறையில் தலைவன் வருவான். நல்ல செய்தி வரும் என்பதை பல்லி சொல்லியதை வைத்து தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் உள்ளது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இக் கைந்நிலை பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

ஆமா-காட்டுப் பசு. சிலைக்கும்-ஒலி செய்யும். மணி-அழகிய. வரை-மலை. ஆரிடை-அரிய வழி. ஏ-அம்பு. மாண்-சிறந்த. சிலையா - வில் ஏந்திய வேடர் இளம். இனமா-விலங்கு கூட்டம். இரிதல்-பயம் கொள்ளுதல். மாண்பு-சிறப்பு. சுரம்-பாலை நிலம். வாய்மாண்ட-வாய்ச் சொல் பலிக்கும் சிறப்புடைய. படும்-ஒலி செய்யும்.

பசலை நீங்குகிறது...! நெற்றியில் ஒளி படர்கிறது

7. அரக்கு ஆர்ந்த ஓமை அரிபடு நீழல்
செருக்கு இல்கடுங்களிறு சென்று உறங்கி நிற்கும்
பரல்கானம் பல்பொருட்குச் சென்றார் வருவர்
நுதற்கு இவர்ந்து ஏறும் ஒளி.

விளக்கவுரை

அரக்கு போன்ற செந்நிறமுள்ள ஓமை மரங்கள் இடை இடையே விழுகின்ற நிழலில் மதமற்ற பெரிய யானைகள் உறங்கும். பாறைக் கற்கள் நிறைந்த பாலைவனப் பாதையில் பொருள் தேட பயணம் சென்ற தலைவர் நிச்சயமாக வந்து விடுவார் உள் நெற்றியில் தோன்றிய பசலையும் மாறி அழகு ஒளி தோன்றுகிறது என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

பொதுவாக ஆண், பெண் இருசாராருக்கும் அளிக்கப் பட்டுள்ள உடல் பஞ்சபூதங்களால் ஆனது. மனநிலைகளுக்கு தகுந்தபடி இவை மாறுகின்றன. அதனால்தான் துக்க காலத் தில் முகம் அழகற்று போகிறது. சந்தோஷம் வரும்போது

பிரகாசம் அடைகிறது. மாறக் கூடியது நிச்சயமாக அழியும். மாறாதது தான் அழியாதது. அதுவே, ஆத்மஒளி. கைந்நிலை பாடல்கள் மூலம் இந்த தத்துவங்களையும் இடையிடையே நீங்கள் சிந்திக்க வேண்டும். பிரிந்தவர் வரப்போகிறார் என்பதை ஆசகமாக பெண் அறிவாளி. அவள் தலைவன் மீது வைத்த அன்பால் இந்த சக்தி வருகிறது. இதை வைத்தே தோழியும் ஆறுதல் கூறுகிறாள். தலைவன் வருவதற்கு முன்பே உன் முகத்தில் பசலை மாறுகிறது. ஒளி வருகிறது. ஆகவே, தலைவன் வருவது உறுதி என்கிறாள். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

அரக்கு-செந்நிறம். ஆர்த்த-இணைந்த. அரிபடு-இடையே விழும். செருக்கு-மதம். பரல்-பருக்கைக் கற்கள். கானம்-பாலை நிலம். நுதல்-நெற்றி. இவர்ந்து-படர்ந்து. ஏறும்-தோன்றும். ஒளி-அழகு.

வருவார் தலைவர்

8. ....

.... வீழ்க்கும்

ஓவாத வெங்கானம் சென்றார்.........

.... வார் வருவார் நமர்.

விளக்கவுரை

வீழ்த்துகின்ற, ஓயாத கனல் மிகுந்த பாலை வனப் பாதை சென்ற நம் தலைவர் வருவார் என்ற பொருளில் இப்பாடல் வரிகள் உள்ளன. கனல் பறக்கும் பாலை நிலப் பாதையிலே பொருள் ஈட்டும் நோக்குடன் தலைவர் தலைவியைப் பிரிந்து சென்றார். தன் வேலைகளை முடித்துக் கொண்டு நிச்சயமாக அவர் வந்து விடுவார். ஏனெனில் சுபநிமித்தங்கள் தோன்றுகின்றன. பல்லியும் சரியான திசையில் இருந்து சொல்கிறது என்ற பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

வீழ்க்கும்-வீழ்த்தும். ஓயாத-ஒழியாத. வெங்கானம்-கொடிய பாலைவனம். நமர்-நம் தலைவர்.

தலைவர் சென்ற இடம் தேடி என் மனம் செல்கிறது

9. ஆந்தை குறுங்கலி கொள்ள நம் ஆடவர்
காய்ந்து கதிர் தெறூஉம் கானம் கடந்தார்பின்
ஏந்தல் இளமுலை ஈர்எயிற்றாய் என்நெஞ்சு
நீந்தும் நெடுஇடைச் சென்று.

விளக்கவுரை

மரப் பொருந்துகளிலிருந்து ஆந்தை மெல்லியதாக அலறுகிறது. நம் தலைவர் சூரிய கதிர்கள் காய்த்து வருத்து கின்ற பாலைவனப் பாதையை கடந்து போனார். உயர்ந்து திகழும் மார்பகங்களும், குளிர்ந்த பற்களும் உடைய என் தோழியே. என் மனமும் அந்த நெடிய காட்டுவழி அவரைத் தேடி போகிறது என்று தலைவி கூறுவது போல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவன் காட்டுவழிப் பாதையிலே போனான். என் மனமும் அரசனை நாடி செல்கிறது. உடல் எங்கிருந்தாலும் மனம் எங்கு வேண்டுமானாலும் செல்லும் சக்தி படைத்தது என்பதை தலைவி உணர்த்துகிறாள். சரீரம் என்பது !தூலம் மனம் என்பது சுட்சுமம். ஸ்தூல உடம்பு அழியும். ஆனால், சுட்சம உடலாகிய மனம் வெகுகாலம் அழியாமல் இருப்பது. அதனால்தான் இப்பிறப்பில் இணைய முடியாதவர்கள் அடுத்து வரும் பிறவிகளில் ஒன்று சேர்கிறார்கள். உண்மை யான அன்பு கொண்ட மனத்திற்கு இந்த அபூர்வசக்தி இருக்கிறது. தமிழ் இலக்கியங்களில் தலைவன்... தலைவி பற்றிய கூடல், ஊடல், பிரிவு ஆகிய விஷயங்கள் இந்த அடிப் படையை வைத்தே எழுந்துள்ளன. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

குறுங்கலி-சிற்றொலி. காய்ந்த-வெப்பமிக. கதிர்-சூரியன். தெறூஉம்-வருத்தும். கானம்-பாலை வனப்பாதை. ஈர்-குளிர்ந்த. எயிறு-பல். நீந்தும்-தாவிச் செல்லும். நெடு-நீண்ட. இடை-பாதை.

வாசல் திறந்து வைப்போம்

10. கள்வர் திரிதரூஉம் கானம் கடந்தவர்
உள்ளம் பிரிந்தமை நீஅறிதி-ஒள்இழாய்!
தொல்லை விடர்அகம் நீந்திப் பெயர்ந்தவர்
வல்லை நாம்காணும் கதவு.

விளக்கவுரை

வழிப்பறி செய்யும் திருடர்கள் சுற்றித் திரிகின்ற பாலை வனப் பாதையில் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றார். அழகிய அணிமணிகள் புனைந்த என் தலைவியே... அவர் ஏன் சென்றார்? என்பதை நீ அறிவாய். செல்வம் தேடிவரத்தானே அவர் சென்றுள்ளார்...? பழைய மலைக் குகைகளையெல்லாம் கடந்து சென்ற அவர் திரும்பி இங்கு வரவும் திறம் படைத்தவர் என்பதை தெரிந்து கொள். விரைவில் தலைவர் வந்து விடுவார். அவரை வரவேற்க நம் வீட்டு வாசல் கதவைத் திறந்து வைப்போம்... என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

வாழ்க்கை நடத்த செல்வம் தேவை. அந்த கடமை கருதி தானே தலைவர் சென்றார்? ஆகவே, கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அவர் திரும்பிவந்துவிடுவார் என்று தோழி கூறுகிறாள். ஆண்கள் செல்வம் தேடி வருவது அவர்கள் கடமை. இல்லறநெறியில் செல்வம் தேடுவதும் ஒரு பகுதி. கடமைப் பயணம் செய்ய சென்றுள்ளார் குறித்து கவலைப் படக் கூடாது என்பது உட்பொருளாகும்.

அ.பொ.

திரிதரூஉம்-திரியும். கானம்-பாலைவனப் பாதை. ஒளி-ஒளியுடைய. இழை-அணிகலன்கள். தொல்லை-பழைமை. விடர்-மலை. அகம்-குகை. பெயர்தல்-திரும்புதல். வல்லை-விரைவு. காணும்-வரப் பார்ப்போம்.

தலைவர் நயத்துடன் திரும்புவாரா.. தோழி..?

11. சிலைஒலி வெம்கணையர் சிந்தியா நெஞ்சில்
கொலைபுரி வில்லொடு கூற்றுப்போல் ஓடும்
இலைஒலி வெம்கானத்து இப்பருவம் சென்றார்
தொலைவு இலைகொல் தோழி நமர்.

விளக்கவுரை

பாலை நிலப் பாதையின் கொடுமைகளை மீண்டும் தலைவி கூறுகிறாள். வில்லில் நாணேற்றி ஒலி எழுப்பி கொண்டும். கூரிய அம்புகளை கைகளில் ஏந்தி கொலை புரிய எண்ணும் கொடிய பாதை அது. நன்மை, தீமை, அறம், பாவம் என்பதை யெல்லாம் எண்ணிப் பார்க்காத எமன் போன்ற கொடியவர் வாழும் பாதை அது. வெப்பத்தால் காய்ந்த சருகுகள் காற்றில் எழுப்பும், காலடி படுவதால் உண்டாகும். சர... சர... என்ற ஒலி எப்போதும் கேட்டபடி இருக்கும் கொடிய பாலைவனப் பகுதி அது. அந்த கொடிய பாதையில் இளவேனில் காலத்தில் நம் தலைவர் சென்றார். கொடிய வெப்பத்தால்தளர்வுற்று இருப்பாரா...? நலமுடன் திரும்புவாரா.. என்று தோழியிடம் தலைவி கேட்பது போல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

கடமையை செய்ய தலைவன் சென்றான். இருப்பினும் தலைவி அவருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ? என்று கவலை கொள்கிறாள். இந்தப் பாசம், பரிவு என்பது தமிழ் பண்பாட்டின் அடையாளம். இந்த அன்புதான் மற்றுமொரு பெரும் சக்தியாக உருவெடுத்து ஆண், பெண் இருசாராரையும் தெய்வீகமாக்குகிறது. அதற்கு முன்னோடி தான் தலைவன், தலைவி ஒருவொருக்கொருவர் காட்டும் இந்த அன்பாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்திருக் கிறது.

அ.பொ.

சிலை-வில். வெம்-கொடிய. கணை-அம்பு. கூற்று-எமன். இலை-சருகு. கானம்-பாலை நிலம். பருவம்-வேனில். தொலைவு-அழிவு, தளர்வு.

பயனில்லா பாலைவனப் பாதை

12. வெம்சுரம் தேரோட வெஃகி நின்று அந்தமாச்
சிந்தையான் நீர்என்று செத்துத் தவாஓடும்
பண்பில் அருஞ்சுரம் என்பவால் ஆய்தொடி
நண்பிலார் சென்ற நெறி.

விளக்கவுரை

வெப்பம் மிகுந்த கொடிய பாலை நிலத்தில் தண்ணீர் போல் தெரிகிறது கானல். அந்த கானல் நீரை உண்மையான நீர் என்று எண்ணி தாகம் தீர்த்துக் கொள்ள தாவி ஓடுகின்ற பயனில்லா பாலை நிலப்பாதை அது. அப்பாதையில் நம் தலைவர் சென்றுள்ளார். இரக்கமில்லாத அந்த வழியிலிருந்து மீண்டு அவர் நலமுடன் திரும்ப வேண்டும் என்று தலைவி, தோழி இருவரும் பேசுவது போல் இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

கானல் நீர் பார்ப்பதற்கு தண்ணீர் போல் தெரியும். அருகே சென்றால் ஒன்றும் இருக்காது. அதேபோல் அன்பே இல்லாதவர்கள் அன்பு இருப்பது போல் நடிப்பதை நாம் காண்கிறோம். அத்தகைய வஞ்சகர்கள் இந்த பாலை நில கானலைவிட கொடியவர்கள். இத்தகைய கொடியவர்களி டமிருந்து நாம் ஆற்றலுடன் வெளியேற வேண்டும். தமிழ் இலக்கிய கருத்துக்களை நம் வாழ்க்கை நிலைகளோடு ஒப்பிட்டு பயன் பெறவேண்டும் என்பதற்காக இந்த சான்றுகளை தருகிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

தேர்-கானல். வெஃகி-விரும்பி. மா-மான். சிந்தை-நினைவு. செத்து-நினைத்து. பண்பில்-பயனில்லாத. ஆய்தொடி-ஆய்ந்தெடுத்த வளையங்கள். நெறி-வழி.

❑ ❑ ❑

முல்லை

காடும் காடு சேர்ந்த இடமும் முல்லை நிலம்

காதலரை வரவேற்க வந்த கார்காலம்

1. கார்செய் புறவில் கவினிக் கொடிமுல்லை
கூர்எயிறு ஈனக் குருந்தரும்ப-ஒரும்
வருவர்நம் காதலர் வாள்தடங் கண்ணாய்
பருவரல் பைதல்நோய் கொண்டு.

விளக்கவுரை

கால்கால பருவமொழி ஆரம்பமாகி விட்டது. முல்லை நிலமெங்கும் முல்லைக் கொடிகள் எழிலாக தழைத்திருக் கின்றன. கூர்மையான இளம் பருவத்தினரின் பற்கள் போல் மொக்குகள் திகழ்கின்றன. குருந்த மரங்களிலும் பூக்கள் பூக்கத் தொடங்கி விட்டதற்கு அறிகுறியாக அரும்புகள் தோன்றியுள்ளன. நம் தலைவர் திரும்பி வருவதாக சொன்ன காலம் வந்து விட்டது நீண்ட வாள் போலும் ஒளியுடைய அகன்ற கண்களையுடைய என் தலைவியே... உடம்பில் பசலை நோய் படர நீ வருந்த வேண்டாம் என்று தோழி தலைவியைத் தேற்றுவதுபோல் இப்பாடல் புனையப்பட் டுள்ளது.

பிரிவுக்குப் பிறகு சந்திப்பு. சந்திப்புக்குப் பிறகு மீண்டும் பிரிவு இதுதான் பொருளீட்ட செல்லும் தலைவன், தலைவி யின் வாழ்க்கை நிலை. இதனை திரும்ப, திரும்ப கைந்நிலை யில் ஆசிரியர் கூறுவதற்கு என்ன காரணம்? மனித சமுதாயத் திற்கு இதனை கூறுவதாய் என்ன பலன்...? என்ற சிந்தனைகள் எழுகின்றன. தலைவன் தலைவி ஆகிய இருவருக்கிடையே

உண்மையான அன்பு இருக்கிறது. அந்த அன்பு காமத்தை தாண்டியதாகவும் இருக்கிறது. அந்த அன்பு காதலரிடையே வேண்டும். வெறும் உடல் இன்பத்திற்காக கொள்ளு அன்பு நிலையானது அல்ல. அதையும் தாண்டி ஒரு தெய்வீகம் மனித உடலில் உள்ளது. அந்த தெய்வீகமே இந்த அன்பை பரஸ்பரம் வழங்க வைக்கிறது. இதை மனித சமுதாயம் புரிந்து கொள்ளவேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கார்-கார்காலம். புறவு-முல்லை நிலம். கவின்-அழகு காட்ட. எயிறு-பல். என-உயிர்க்க. குருந்து-குருந்த மரம். அரும்பு-மொட்டு. ஓர்தல்-உணர்தல். வாள்-ஒளி, கூர்மை. தடம்-அகன்ற. பருவரல்-வருத்தம். பைதல்-பாலை, காதல் நோயால் பருவப் பெண்ணின் உடலில் படரும் தேமல்.

தலைவர் வருவது நிச்சயம்

2. குருதி மலர் தோன்றி கூர்முகை ஈன்
.... சேவல் எனப் பிடவம் ஏறி
பொருதீ எனவெருளும் பொன்நேர் நிறத்தாய்
அரிது அவர் வாராவிடல்.

விளக்கவுரை

கூர்மையான மொக்குகளை உடைய செங்காந்தல் செடியில் ரத்தம் போல் சிவப்பு மலர்கள் பூக்கும். இந்த சிவப்பான செங்காந்தள் மலர்கள் சேவலின் கொண்டை போல் திகழ்கிறது. இவை தன்னிடம் சண்டையிட வந்த சேவல்கள் என்று நினைக்கும் உண்மையான சேவல் பிடலை என்ற செடியின் மீது ஏறி பயந்து ஓடும். இவையெல்லாம் கார்காலத்தின் அடையாளங்கள். தலைவர் வரப்போகிறார் என்பதை உறுதிபடுத்தும் அடையாளங்கள். ஆகவே, தங்க மேனி நிறமுடைய என தலைவியே... நீ வருந்த வேண்டியதில்லை. தலைவர் வராது இருக்கமாட்டார் என்று தோழி ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

கார்கால காட்சிகளை தன் கற்பனைத் திறத்தால் ஆசிரியர் விளங்குவது இப்பாடலுக்குரிய தனி சிறப்பாக விளங்குகிறது. சிவப்பான செங்காந்த மலர்கள் சேவலின் கொண்டைபோல் திகழுவதால் உண்மையான சேவல் அவை சண்டையிட வருவதாக எண்ணி பயந்து ஓடுகிறதாம். புலவரின் கற்பனை திறனுக்கு சான்றாக இது விளங்குகிறது.

அ.பொ.

குருதி-இரத்தம். கூர்-கூர்மையான. முகை-மொக்கு. ஈன்-தோன்றும். பிடவம்-ஒருசெடி. பொரு-பற்றிய. தீ-நெருப்பு. வெருளும்-பயப்படும். நேர்-போன்ற. நிறம்-அழகு.

பசலை படர்கிறது

3\. ....

.... ஒல்கப் புகுதரு
கார்தரு மாலை கலந்தார் வரவுள்ளி
ஊர்தரும் மேனி பசப்பு.

விளக்கவுரை

அசைந்தாடி வருகின்ற கார்காலத்து மாலைப் பொழுதில் என் தலைவர் என்னைக் கலந்தார். அதை நினைத்து, நினைத்து ஏங்குவதால் என் உடலில் பசலை படர்கிறது என்று தலைவி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவருடன் கூடிய இன்பம் பிரிவு நிலையில் நினைக்கும் போது பெண்கள் உடலில் இயற்கையாக பசலை நோய் படர்வதை திரும்ப, திரும்ப ஆசிரியர் கூறுகிறார். காரணம் என்ன? தலைவி உத்தமமானவள். தான் நேசித்த தலைவனைத் தவிர காதல் நோயை போக்கிக் கொள்ள விரும்பாதவள். கற்புக்கரசிகள் வாழ்க்கை முறை இப்படித்தான் இருக்கும். சிங்கத்தின் வலிமையை மற்றொரு சிங்கம்தான் அறிய முடியும். கற்புக்கரசிகளின் மகத்துவம் அதேபோல் வாழும் கற்புக்கரசிகளுக்குத்தான் தெரியும். தமிழ் பண்பாட்டு உணர்வில் வாழ்ந்த பெண்கள் தன் தலைவனையே நினைத்து

பசலை நோய் ஏற்று வாடினார்கள் என்பது இப்பொருளையே தருகிறது.

அ.பொ.

ஒல்க-அசைய. புகுதரு-வரும். கார்-கார்காலம். வரவுள்ளி-வரவை எதிர்பார்த்து. பசப்பு-பசலை.

வருவது தலைவர் போல தெரியுது

4. பெய்த புறவின் கடுமான்தேர்
ஒல்லைக் கடவார் இவர்கணின் காதலர்
சில்................................

விளக்கவுரை

மழை பொழிந்திருக்கும் இந்த முல்லை நிலத்தில் விரைந்தோடும் குதிரைகள் பூட்டிய தேரை விரைவாக ஓட்டி வரும் இவரைக் கண்டால் நம் தலைவர் போலவே தோன்றுகிறது என்று தலைவி கணிப்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனிசிறப்பு உண்டு. நளச் சக்கரவர்த்தி கலியினால் பீடிக்கப்பட்டு தன் மனைவி தமயந்தியை பிரிகிறார். அவர் உடல் கறுமையாக மாறுகிறது. நளச்சக்கரவர்த்தியை கண்டுபிடிக்க தமயந்திக்கு மறுசுயம் வரம் நடக்கிறது. அப்போது ஒரு மன்னனுக்கு தேரோட்டி யாக நளச் சக்கரவர்த்தி வருகிறார். தேதை மிக வேகமாக ஓட்டும் திறன் அவருக்கு உண்டு. அதைக் கண்டு அரசனே வியப்படைகிறான். சமையல் கலையிலும் வல்லவர் நளச் சக்கரவர்த்தி. மடைப்பள்ளியில் அவர் செய்த சமையலை ருசி பார்த்தே அவர் தன் கணவன் தான் என்று நிச்சயிக்கிறான் புத்திசாலியான தமயந்தி. அது மட்டுமல்ல தமயந்தியை மணக்க தேவர்கள் நளச்சக்கரவர்த்திபோல் உருவம் கொண்டு அமர்ந்தபோது உண்மையான அடையாளங்களை கண்டு உண்மையான நளச்சக்கரவர்த்திக்கு அவள் மாலயிட்டதை நாம் அறிவோம். தேவர்களின் கால்கள் பூமியில் படாது.

கண் இமைக்காது. சூடிய மலர்கள் வாடாது. இந்த அடையாளங்களை கண்டு தமயந்தி தான் விரும்பியவனுக்கே மாலையிட்டாள். அதேபோல் தலைவி, தன் தலைவர் கார்காலத்தில் விரைவாக ஓட்டி வரும் தேரினைப் பார்த்தே நம் தலைவர்போல் தெரிகிறது என்று முடிவுகட்டினாள் என்பது கருத்து. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

புறவு-முல்லை நிலம். கடுமான்-விரைந்தோடும் குதிரை. ஒல்லை-விரைவு. கடவார்-வருபவர்.

பொழிகிறது கார்கால மழை

5\. .... குருந்தலரப்
பீடுஆர் இரலை பிணைதழுவக் காடாரக்
கார்வானம் வந்து முழங்க........ .

விளக்கவுரை

குருந்த மரங்கள் மலர் பூத்து குலுங்க கார்கால மழை பொழிகிறது. சிறப்புமிக்க ஆண் மான்கள் துணையோடு கூடி மகிழ கார்கால மழை பொழிகிறது. காடுகள் செழிக்க கார்கால மழை பொழிகிறது இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

மலர்கள் பூக்கும் காலத்தில் பூக்க வேண்டும். கார்கால மழை காலத்தில்தான் ஆண் மான்கள் பெண்மான்களோடு கலந்து இன்புறும். காடுகள் கார்காலத்தில்தான் செழிக்கும். காலம் கைகூடும்போதுதான் நினைப்பது நிறைவு ஆகிறது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

அலர-பூக்க. பீடுஆர்-பெருமை பொருந்திய. இரலை-ஆண்மான். பிணை-துணை. காடார-காடு செழிக்க. வானம்-மழை மேகம்.

கொன்றை ஊதும் யாதவர்

6. ....
....
கொன்றை கொடுகுழல் ஊதிய கோவலர்
மன்றம் புகுதரும் போழ்து.

விளக்கவுரை

கொன்றை மரக் காய்களை ஊது குழல்போல் வாயில் வைத்து ஊதிக் கொண்டு வரும் இடையர்கள் வீடு திரும்பும் மலைப்பொழுதை இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

கோவலர்-இடையர். மன்றம்-ஊர்ப் பொது இடம். போழ்து-சமயத்தில்.

வான்மழை

7. ....
....
வானம்
வந்து துளி வழங்கக் கண்டு.

விளக்கவுரை

கார்கால மேகம் வானிலிருந்து மழைத் துளிகள் பொழிவதை கூறுகிறது இப்பாடலே.

அ.பொ.

துளி-மழை. வழங்கல்-பெய்தல்.

மாலைப் பொழுது வர்ணனை

8. காய்கதிர் வானம் கதழ்எரி...............
....
.... எழுநெஞ்சே செல்லாயால்
கூர் எரி மாலைக் குறி.

விளக்கவுரை

மேகங்கள் வானிலிருந்து மழையைப் பொழியவில்லை. நெருப்பை சிந்துகிறது என் மனமே. நீ எழுந்து சென்று இந்த

மாலைப்பொழுதின் குறிப்பை தலைவருக்கு சொல்வாயாக... என்று தலைவி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது. மாலைப்பொழுதில் பொழியும் மழை தலைவர் வராததால் நெருப்பு துளிகளாக தலைவிக்குத் தெரிகிறது. தன் மனத்தை தலைவனிடம் தூது போகச் சொல்லி கேட்கிறாள் அவள். பரஸ்பரம் அன்பு கொண்டவர்கள் நினைப்பதை மற்றவர்கள் அறியமுடியும். இந்த அருமையான தத்துவத்தை இப்பாடலில் புகுத்தி யிருக்கிறார் புலவர். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

காய்-வருத்தும். கதிர்-சூரியச் சுடர். கதழ்-அடர்த்தி. எரி-நெருப்பு. கூர்எரி-கடும் நெருப்பு. குறி-நோக்கம்.

நோய் போக்க தலைவர் வருவாரா?

9. தழைஅவிழ்..........................

....

உளையார் கலிநன் மாப்பூட்டி வருவார்

களையாரோ நீஉற்ற நோய்.

விளக்கவுரை

பிடரி மயிருடைய செருக்கு மிக்க நல்ல குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி வருவார் நம் தலைவர். நமக்குள்ள பசலை நோயை போக்க வரமாட்டாரா என்று தலைவி ஏங்குவதை சித்தரிக்கும் பாடல் இது.

அ.பொ.

தழை-கட்டு. உளை-பிடரி. கலி-வலிமை. நன்மா-நல்ல குதிரை. பூட்டி-கட்டி. களைதல்-நீக்குதல்.

தலைவர் வந்து விட்டார்

10. முல்லை எயிறு ஈன

.... மல்கிக்

கடல்முகந்து கார்பொழிய காதலர் வந்தார்

உடனியைந்த...............

விளக்கவுரை

இளம் பெண்களின் கூர்மையான பற்களைப்போல அம்புகள் முல்லைக் கொடிகளில் தோன்ற, கடல் நீரை முகந்து வந்த மேகங்கள் எங்கும் மழையைப் பொழிய நம் தலைவர் வந்தார்... என்று இப்பாடல் கூறுகிறது.

அ.பொ.

எயிறு-பல். ஈன-அரும்ப. கார்-மழை மேகம். இயைந்த-பொருந்திய.

தீங்குழல் ஊதும் யாதவர்

11. ....
.... பால்வாய் இடையார்
தெரிவிலர் தீங்குழல் ஊதும் பொழுதால்
அரித..

விளக்கவுரை

பருகிய பால் மணம் மாறாத வாயுடைய ஆயர்கள் இசை பற்றிய ஞானம் இல்லாமல், அது தெரியாத நிலையில் இனிமையாக குழல் ஊதி வரும் மாலைப் பொழுது. இப்பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

இசை ஞானம் அறியாத இடையர்கள் இனிமையாக குழல் ஊதி வருகிறார் என்று புலவர் கூறுகிறார். இசை ஞானம் இல்லாவிட்டாலும்கூட இனிமையாக குழலை வாசிக்க முடியும் என்பது இதற்கு அர்த்தமாகிறது.

அ.பொ.

இடையர்-ஆயர். தெரிவிலர்-இசை பற்றி அறியாதவர். தீங்குழல் - இனிய புல்லாங்குழல்.

தாமதமின்றி தலைவர் வருவார்

12. பிடவம் குருந்தொடு பிண்டி மலர
மடவமயில் கூவமந்தி மாகூரத்
தடமலர்க் கோதையாய் தங்கார் வருவர்
இடபமெனக் கொண்டு தாம்...... .

விளக்கவுரை

பிடவம் செடியும், குருந்தும், அசோக மரங்களும் பூத்துக் குலுங்குகிறது. அழகிய இளமான்கள் ஆடிக் களிக்கின்றன. குரங்குகளும், மற்ற விலங்கினங்களும் குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. சிறப்பு பொருந்திட மலர்களால் தொடுத்த மாலை அணிந்த என் தலைவியே... நம் தலைவர் மேலும் அங்கே தங்கமாட்டார். காளை போல் பெருமிதத்துடன் வருவார் என்று தோழி தேற்றுகிறாள். ஏனெனில் தலைவியின் மனதை தலைவர் அறிவார். தலைவரின் மனதை தலைவியும் அறிவாள். தலைவி எப்படி இங்கு பிரிவுத் துயரம் தாளாமல் புலம்புகிறாளோ அதேபோல் தலைவரும், தலைவி நினைவாகவே இருப்பார். பெண்கள் அழுது புலம்புவார்கள். கண்ணீர் வடிப்பார்கள். ஆனால் ஆண்கள் மனதிலேயே நினைத்து, நினைத்து சஞ்சலப்படுவார்கள். தோழிக்கு இது நன்கு தெரியும் என்பதால் தலைவர் தாமதமின்றி வருவார் என்று தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

அ.பொ.

பிண்டி-அசோகு. மட(வ)ம்-இளமை. மந்தி-ஆண் குரங்கு. மா-விலங்கு. கூ(தி)ர்-குளிர். தடம்-பெருமை. கோதை-மாலை. தங்கார்-தங்காது. இடபம்-காளை.

மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலம்

பாணனே... பொய் கூறாதே போ...

1. கழனி உழவர்கலி அஞ்சி ஓடி
தழென மதஎருமை தண்கயம் பாயும்
பழன வயலூரன் பாண எம்முன்னாப்
பொழெனப் பொய் கூறாது ஒழி.

விளக்கவுரை

வயலில் அறுவடை, நாற்று நடல், களை எடுத்தல் போன்ற காலங்களில் உழவர்கள் ஆரவார ஒலி எழுப்புவார்கள். நாற்று நடும்போது பெண்கள் பாடுவார்கள். உழவர்கள் வேலை வாங்கும் பொருட்டு ஆரவாரத்துடன் கட்டளையிடும் முறையில் பேசுவார்கள். இந்த ஒலிகளைக் கேட்டு பயந்து போன எருமைகள் குளிர்ந்த நீருடைய குளத்தில் விழுகின்றனவாம். புலவரின் கற்பனையைப் பாருங்கள். அடுத்து தலைவன் பரத்தையர்பால் சென்றான். அங்கிருந்தபடியே பாணனை தலைவிக்கு தூது அனுப்புகிறான். கோபம் கொண்ட தலைவி உன் தலைவனின் பெருமையை பொய்யாக அளக்காதே... போதும் உன் புராணம் போ... என்று மிரட்டும் போக்கில் பேசுகிறாள். இதனை உணர்த்தும் பாடல் இது.

தலைவன் பரத்தையிடம் இருக்கிறான் என்ற காரணத்தால்தான் தலைவி இவ்வாறு சினத்துடன் பேசுகிறாள். அந்தக் காலந்தொட்டே தலைவியிடம் காதல் இருக்க பரத்தையரைத் தேடி தலைவன் சென்றிருக்கிறான் என்று அறிய முடிகிறது. இது தீய ஒழுக்கம் என்று தெரிந்திருந்தும்

நல்லகுணமுடைய தலைவன் பெண்கள் வலையில் விழுவதும் கர்ம வினையின் காரணமாகவே இருக்க வேண்டும். இறைவனின் திருவுளப்படி இந்த உலகம் இயங்குகிறது. நன்மை, தீமை இரண்டும் இங்கே யுகயுகங்களாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இதுவரை இதன் காரணத்தை யாரும் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. எல்லாம் வல்ல இறைவனால் எல்லோரும் ஒழுக்கமாக வாழ செய்ய இயலாதா? என்பது கேள்வி. இதற்கு திருப்திகரமான பதில் இல்லை என்பதை கூறத்தான் வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கழனி-வயல். கலி-ஒலி. மதம்-வலிமை. தண்-குளிர்ச்சி. கயம்-குளம். பழமை-மருதநில வயல். ஒழி-போய் விடு.

இனி தலைவன் இங்கு வரவேண்டாம்

2. கயலினம் பாயும் கழனி நல்லூர
நயமிலேம் எம்மனை இன்றோடு வாரல்
துயிலின் இளமுலையார் தோள்நயந்து வாழ்கின்
குயி.. கொண்டு.

விளக்கவுரை

கயல் மீன்கள் துள்ளி விளையாடும் வயல் வளம் நிறை மருத நிலத்துத் தலைவன் விரும்பும் இளமை அழகும். எழில் நலமும், உடல் வனப்பும் எனக்கு குன்றிவிட்டது. இனி அவர் என் வீட்டின் பக்கம் வரவேண்டாம். இளமையான மார்பகங்களையுடைய பரத்தையர் தோள் தழுவி அங்கேயே அவர் இருக்கட்டும் என்று தலைவி தன் துன்பத்தை வெளிப்படுத்துவதை பாடலாக புனைந்திருக்கிறார் புலவர்.

பரத்தையரிடம் தலைவன் சென்றதால் இனி அவர் வரவேண்டாம் என்கிறார் தலைவி. அவர் கூறுவது நியாயம் தான். ஆனால், அன்புக்கு ஒரு இலக்கணம் இருக்கிறது... தலைவனோ.. தலைவியோ யார் எந்த தவறு செய்தாலும் தொடர்ந்து அன்பு செலுத்த வேண்டும். அப்படி அன்பு செலுத்த முடியுமானால் யோகிகள் தங்களுக்கு கிடைத்

திருப்பதாக கூறும் அத்துணை சித்திகளும் ஒரு ஆளுக்கோ... பெண்ணுக்கோ கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக் கிறது இங்கு தலைவி தலைவனை வெறுத்து ஒதுக்குகிறாள். அப்படியென்றால் அவள் தலைவனிடம் கொண்டது காமத் தின் அடிப்படையில் ஏற்பட்ட அன்புதானா..? உண்மை அன்பு இல்லையா..? என்ற வினா எழுகிறது. வாசகர்களே சிந்தித்து முடிவு காணலாம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடலே அமைந்துள்ளது.

அ.பொ.

கயலினம்-மீன் கூட்டம். கழனி-வயல். நயமிலேம்-விருப்பத்திற்குரியதாக இல்லாது போனோம். வாரல்-வரவேண்டாம். துயில்-தூக்கம். நயந்து-விரும்பி.

மகனோடு வரும் தலைவன்

3. முட்ட முதுநீர் அடைகரை மேய்ந்தெழுந்து
தொட்ட வரிவரால் பாயும் புனலூரன்
கட்டலர் கண்ணிப் புதல்வனைக் கொண்டு எம்இல்
சுட்டி அலைய வரும்.

விளக்கவுரை

பழமையான கடற்கரை கால்வாயின் நீர் முழுவதுமாக மோதும் கரை மீது மேய்ந்து திரிகின்ற இரைகளைத் தின்று தொட்டு வரைந்தது போலிருக்கும் கோடுகள் இருக்கும் வரால்மீன்கள் நிறைந்த நீர்வளம் மிக்க மருத நிலத் தலைவன் நம் தலைவன் அவன் தன் மகனை நம் வீட்டுக்கு அழைத்து வருகிறான் கட்டிய மலர்மாலை சூடியிருக்கிறான் அச்சிறுவன். நெற்றிச் சுட்டியும் அணிந்திருக்கிறாள் அவள் என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். அப்படியென்றால் தலைவனுக்கு வேறுமனைவி உண்டு என்று தெரியவருகிறது. அந்த மனைவிக்கு பிறந்த தன்மகனை தலைவி வீட்டுக்கு அழைத்து வருவது ஏன்? தான் திருமணமானவன் என்பதை தலைவி அறிந்து கொள்ளட்டும். பிறகு தன்மீது குறை சொல்லக் கூடாது என்பதற்காக இருக்குமா...? வாசகர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

முட்ட-முழுவதும். முதுநீர்-பழைய கழிநீர். அடைகரை-கரை அடைந்து. தொட்ட-பதித்த. புனல்-நீர். கட்டலர்-விரிந்து மலர்ந்த. கண்ணி-தலைமாலை. இல்-வீடு. கட்டி-நெற்றிக்கட்டி (அணிகலன்)

தலைவனோடு எப்படி சேர்வாள் தலைவி..?

4. தாரா இரியும் தகைவயல் ஊரனை
வாரான் எனினும் வருமென்று சேரி
புலப்படும் சொல்லும்இப் பூங்கொடி அன்னாள்
கலப்பு அடும் கூடுங்கொல் மற்று.

விளக்கவுரை

தாராப் பறவைகள் பறந்து திரியும் அழகிய வயல்கள் நிறைந்த மருத நிலத் தலைவன் அவன். அத்தலைவன் சேரி பரத்தையரைத் தேடிச் செல்லாத நிலையிலும் அப்பரத்தையர் வேண்டுமென்றே தலைவன் தங்களைத் தேடி தினமும் வருகிறான் என்று பொய் சொல்கிறார்கள். பூங்கொடி போன்ற எம் தலைவி தலைவனோடு கூடி மகிழ தடையாக இருப்பது இதுவே. பரத்தையர் கூறும் பொய்யால் வீண் கோபம் கொள்கிறாள் தலைவி. தலைவன் மீது அவனுக்கு எப்படி பரிவு வரும்? என்று தோழி கேட்பது போல் இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவன்... தலைவியின் ஒற்றுமையை குலைக்க பரத்தையர் வஞ்சமாக பொய் சொல்வது அக்காலத்தி லிருந்தே இருந்து வருவதை அறிகிறோம். தங்களைத் தேடி வராத கோபத்தில் பரத்தையர் எப்படி வேண்டுமானாலும் பொய் சொல்வது இயற்கையானது. உடலை விற்கும் விலை மகளிர் பொய் சொல்ல அஞ்சுவார்களா...? இந்த விஷயங் களையெல்லாம் புலவர் ஏன் கூறுகிறார்...? மனித சமுதாயத் திற்கு என்ன நன்மை இதில் உள்ளது? பரத்தையர் வசம் சிக்கினால் பல இடர்கள் வரும் என்பதை அறியலாம்.

ஆனால், பரத்தையர் கூறம் பழிச் சொற்களுக்கு ஆளாவது பற்றி என்ன கூறுவது? இந்த உலகில் ஒழுக்கமாக வாழ்ந்தாலும் பொறாமை படுவார்கள். ஒழுக்கமின்றி அலைந்தாலும் நிந்திப்பார்கள். ஆகவே, மற்றவர்கள் பழிச் சொற்களைப் பற்றி பொருட்படுத்தாமல் ஒழுக்கமுடன்

உறுதியாக வாழ்ந்தால் பொய்கள் எடுபடாது என்பதே இதற்குப் பதில். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

இரியும்-திரியும். தகை-அழகு. சேரி-பரத்தையர் குடியிருப்பு. கலப்பு-கலத்தில். அடும்-கெடுக்கும்.

மகன் துணையே போதும் எனக்கு

5. பொய்கை நல்லூரன்திறம் கிளப்பஎன் உடையை!
அஃது அன்று எனினும் அறிந்தோம்யாம்-செய்தி
நெறியின் இனியசொல் நீர்வாய் மழலைச்
சிறுவன் எமக்குடைமை யால்.

விளக்கவுரை

நீர்வளம் நிறைந்த குணங்கள் மிகுந்துள்ள மருத நிலத் தலைவனின் உயர் குணங்களை போற்றிப் புகழ வந்த பாண னிடம் தலைவி கூறுகிறாள்.. பாணனே.. உன் தலைவன் புகழைப் பற்றி கூற உனக்கு என்ன தகுதி உள்ளது? எனக்கு செய்திகள் தெரியும் எமக்கு துணையாக இபபோது நல்ல இனிய சொற்களைப் பேசும் எம் மழலை மொழிப்பிள்ளை இருக்கிறான். ஆகவே, வேறு எவருடைய தயவும் எனக்குத் தேவையில்லை என்று தலைவி கூறுகிறாள். தலைவனிடம் தலைவிக்கு ஏன் வெறுப்பு? எனக்கு செய்திகள் தெரியும் என்று தலைவி கூறுகிறாள். தலைவனின் நடத்தைப் பற்றி அவன் சந்தேகம் கொண்டிருக்கிறான் என்பதை இந்தப் பேச்சு உணர்த்துகிறது.

அ.பொ.

பொய்கை-குளம். திறம்-குணநலன். கிளப்ப-விளக்க. செய்தி-நடப்பு. உடைமை-உரிமைப் பொருள்.

என் தலைவன் குணம் எனக்குத் தெரியாதா..?

6. நீத்தம் நீர்ஊரன் நிலைமையும் வண்ணமும்
யார்க்கு உரைத்தி பாண! அதனால்யாம் என்செய்தும்?
கூத்தனாக் கொண்டு குறைநீ உடையையேல்
ஆட்டுவித்து உண்ணினும் உண்.

விளக்கவுரை

வெள்ளம்போல் நீர்வளம் கொண்ட மருத நிலத் தலைவனின் பண்பு, ஒழுக்கம் பற்றி யாரிடம் வந்து அளக்கிறாய்? என் தலைவன் குணம் எனக்குத் தெரியாதா? என்று பாணனிடம் கடிந்து பேசுகிறாள் தலைவி. உனக்கு ஏதேனும் தேவையிருந்தால் அவரிடம் கூத்தாடி பெற்றுக் கொள். அவரையும் கூட ஆடச் செய்து பிழைத்துக் கொள். இங்கு வராதே என்று கோபிக்கிறாள் தலைவி.

தலைவன் பரத்தையர்போல் சென்றாள் என்ற சந்தேகம் தலைவியை உலுக்குகிறது. அதனுடைய வெளிப்பாடே இந்த கோபம் இதை அறிவதால் மனித சமுதாயத்திற்கு என்ன நன்மை? காமத்தால்தான் நாம் உறவை இழக்கிறோம். ஏன்... ஆண்டவனையே மறக்கிறோம். ஒழுக்கம் கெட்டால் யாரும் நம்மை நம்பமாட்டார்கள் என்ற அரிய உண்மை இப்பாடலில் புதைந்து உள்ளது. இச்சிந்தகைளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

நீத்தம்-வெள்ளம். வண்ணம்-இயல்பு. கூத்தரை-கூத்தாடி போல். ஆட்டு வித்து-ஆடச் செய்து. உண்-உன் வயிற்றுச் சோறுக்கு வழி தேடிக் கொள்.

பரத்தையர் சூழ்ச்சி

7. போது அவிழ் தாமரை பூந்துறை ஊரனைத்
தாதவிழ் கோதைத் தகையிலார் தாம்புலப்பர்
ஏதின்மை சொல்லி இருப்பர் பிறமகளிர்
பேதைமை தம்மேலே கொண்டு.

விளக்கவுரை

மொட்டவிழ்ந்து மலர்ந்த தாமரை மலர்கள் பூத்த நீர்த் துறைகளை உடைய மருத நில ஊரின் தலைவனை மகரந்தம் சிந்தும் மாலைகள் அணிந்த அழகற்றவர்களான பரத்தையர் மாற்றுகின்றனர். பிற பெண்களிடம் இருக்கும் அறியாமை எனக்கிருப்பதாகக் கூறி அவரை என்னிடமிருந்து பிரிக்க

சூழ்ச்சி செய்கின்றனர். அப்படியிருக்க நான் எப்படி தலைவரிடம் பரிவு காட்ட முடியும்? என்று தலைவி பாண னிடம் கேட்கிறாள். பரத்தையர் பல பொய்களைக் கூறி (இழிகுல மகளிர் போல்) தலைவிக்கும் தலைவனுக்கும் பகையை ஏற்படுத்துகிறார்கள் என்பது தலைவியின் குற்றச் சாட்டு.

இந்த உலகில் எல்லா நிலைகளிலும் வஞ்சகம், பரத்தையர் பொருளுக்காக உடலை விற்பவர்கள். பொய், வஞ்சகம், சூது ஆகியவை அவர்களுக்கே உரிய இயல்பு. அவர்கள் பேச்சை நம்புதல் கூடாது. அப்படி ஏதேனும் அவர்கள் கூறுவதில் உண்மை இருந்தால் தீர விசாரித்துப் பார்க்க வேண்டும். அப்படியே அவர்கள் சொல்வதை நம்பக்கூடாது. இதை அறிந்ததால்தான் தலைவி பாணனிடம் இப்படி கோபமுடன் பேசுகிறாள் என்பது அறியப்படுகிறது.

அ.பொ.

போது-மொக்கு. அவிழ்-விரியும். தாது-பூவின் மகரந்தம். கோதை-மாலை. தகை-அழகு. புலத்தல்-ஊடல் கொள்ளுதல். ஏதின்மை - பகைமை. பேதமை-அறியாமை.

தலைவனை எப்படி வரவேற்பேன்...?

8. தண்துறை ஊரன் தடமென் பணைத்தோளாய்!
வண்டூது கோதை வகைநாடிக்-கொண்டிருந்து
கோல வனமுலையும் புல்லினான் என்றெடுத்துச்
சாலவும் தூற்றும் அலர்.

விளக்கவுரை

பரத்தையரிடம் சுகம் அனுபவித்து விட்டு வரும் தலைவனை வெறுத்தொதுக்காது ஏற்றுக் கொள்க என்று தோழி கூற தலைவி அதற்கு பதில் கூறுகிறாள். உயர்ந்த மென்மையான மூங்கில் போன்ற தோள்களையுடைய என் தோழியே. குளிர்ந்த நீர்த் துறைகள் உடைய மருத நிலத் தலைவன் தேன் உண்டு ரீங்காரம் செய்யும் மலர் மாலைகள் அணிந்த பரத்தையரிடம் சென்றான். செஞ்சாந்து குழம் பெழுதிய மார்பகங்களுடன் கூடி சுகம் எண்டு இன்புற்றான்.

இதையறிந்து ஊரே அவனைத் தூற்றுகிறது. அப்படிப்பட்ட தலைவனை நான் எப்படி வரவேற்பேன்? இது தலைவியின் கூற்று.

பரத்தையரிடம் தலைவன் சென்றதால் ஊரே தூற்று கிறது. நான்மட்டும் வரவேற்கவேண்டுமா? என்ற பொருளில் தலைவி பேசுகிறாள். பரத்தையர் வசம் சிக்கினால் ஊர் ஏசும். உற்றார் உறவினரும் மதிக்கமாட்டார்கள் என்ற கருத்து இங்கு உணர்த்தப்படுகிறது.

அ.பொ.

தண்-குளிர்ச்சி. துறை-நீர்த்துறை. தடம்-பெருமை. பணை-மூங்கில். கோதை-மாலை. கோலம்-சாந்துக் கோலம். வனமுலை-அழகு மார்பு. புல்லுதல்-தழுவுதல். சால்-மிக. அலர்-பழி.

ஆசை வார்த்தை பேசியது பொய் தானோ?

9. மூத்தேம் இனிப்பாண முன்ஆயின் நாம்இளையேம்
கார்த்தண் கலிவயல் ஊரன் கடிதுஎமக்குப்
பாத்துஇல் பயமொழி பண்புபல கூறி
நீத்தல் அறிந்திலேம் இன்று.

விளக்கவுரை

பாடி பரிக பெறும் பாணனே... நானும் முன்பு இளமை யோடு இருந்தவள் தான் இப்போது வயதில் மூத்து முதுமை அடைந்து விட்டேன். பெருமழை பெய்யச் செழித்துத் தழைத்த வயல்வளம் உடைய மருத நிலத் தலைவன் உன்னைப் பிரிய மாட்டேன் என்று ஆசை வார்த்தைகள் பல கூறிய தலைவன் இவ்வளவு விரைவாக என்னைப் பிரிந்து போய் விடுவான் என்று தெரியாமல் போயிற்றே... என்று தலைவி ஏமாற்றத்தை ஏக்கப் பெருமூச்சைப் பாணனிடம் வெளிப் படுத்துவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவியின் இளமையை முதுமை மாற்றி விட்டது. அதனால் தலைவன் பரத்தையரிடம் சென்றான். இது வர

உண்மையான அன்பு? காமத்தால் ஏற்பட்ட அன்பு நிலை யானது அல்ல என்பதைத் மனித குலத்திற்கு உணர்த்துவதற் காக இது போன்ற பாடல்களை புலவர் அளித்திருக்க வேண்டும். அதேபோல் ஆணின் இளமை போய் விட்டால் பெண் மனதை மாற்றிக் கொண்டால் அதுவும் காமம் சம்பந்தப்பட்ட அன்புதான். இந்த தலைவன், தலைவி மிகவும் கீழ்ப்படியில் இருப்பவர்கள் என்பதை அறிய வேண்டும். எந்த நிலையிலும் உண்மையான அன்பு செலுத்துகிறவர்கள்தான் முதல்படியில் இருப்பவர்கள். அவர்கள் தெய்வீக வடிவை நோக்கி நெருங்கிக் கொண் டிருக்கிறார்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கார்-மழை. தண்-குளிர்ச்சி. கலி-தழைத்த. பாத்துஇல்-பிரிதல் இல்லாத. பயமொழி-ஆசை வார்த்தைகள். நீத்தல்-பிரிந்து போதல்.

பாணனே பொய் கூறாதே... போய் விடு

10. கயநீர்ப் பாய்ந்தோடும் காஞ்சி நல்ஊரன்
நயமே பலசொல்லி நாணினன் போன்றான்
பயன்இல் யாழ்ப்பாண பழுதாய கூறாது
எழுநீ போ நீடாதுமற்று.

விளக்கவுரை

பொய்கை நீர் வழிந்தோடும் காஞ்சி மரங்களுக்குப் பாயும் நீர்வளம்மிக்கவன் மருதநிலத் தலைவன் என்னிடம் நலம் தரும் இனிய மொழிகள் கூறி மகிழ்ச்சி தந்தவன். இன்று வெட்கத்தை கைவிட்டு பரத்தையரிடம் சென்று இருந்து விட்டு இங்கு வர நினைக்கிறான். பயனற்ற யாழை கையில் வைத்திருக்கும் பாணனே... தலைவனின் ஒழுக்கக் கேடான பண்பு பற்றி பொய்களைக் கூறி எதுவும் சொல்ல வேண்டாம் போய் விடு என்று கோபத்துடன் சொல்கிறாள் தலைவி.

பரத்தையிடம் இன்பம் துய்க்கும் தலைவன் அங்கிருந்து தலைவியிடம் வந்து இன்பம் துய்க்கவும் விரும்புகிறாள். இந்த ஒழுக்கக்கேடு பழங்காலத்திலிருந்தே ஆண்களிடம் இருந்து வந்திருக்கிறது. இந்த ஒழுக்கக்கேடு வெறுக்க வேண்டியதுதான். மனித சமுதாயம் இப்பாடலின் மூலம் அறிவது என்ன? ஒழுக்கம் கெட்டால் காதலியும் மதிக்க மாட்டாள். ஊராடும் மதிக்கமாட்டார்கள் என்பதே ஆகும்.

அ.பொ.

கயம்-குளம். நயம்-நல்ல. நாண்-வெட்கம். பழுதாய-குற்றமுடைய. நீடாது-உரையை காலத்தை நீட்டிக்காது.

என் வீடு வரவேண்டாம்

11. அரக்காம்பால் தாமரைஅம் செங்கழுநீர்
ஒருக்கார்ந்த அல்லி ஒலித்துஆரக் குத்தும்
செருக்கார் வளவயல் ஊரன் பொய்ப்பாண
இருக்களம் இல்உள் வாரால்.

விளக்கவுரை

அரக்கு போல சிவந்த செங்குமுத பூக்களும், தாமரைப் பூக்களும் அழகிய நிறம் கொண்ட செங்கழு நீர் பூக்களும், அல்லியும், மிகவும் தழைத்து செழித்து ஒன்றுடன் ஒன்று இணைந்திருக்கும் மருத நிலம். மகிழ்ச்சி நிறைந்த வளமிக்க வயல்களை உடைய நிலத் தலைவன் பற்றி பொய்யான புகழுரை கூற வந்துள்ள பாணனே... உன் தலைவன் பரத்தை யருடன் சேரியிலேயே இருக்கட்டும் என் வீட்டுக்கு வர வேண்டாம். இவ்வாறு பாணனிடம் தலைவி கோபத்துடன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

பரத்தையரிடம் தொடர்பு, தலைவியிடமும் தொடர்பு வைக்க எண்ணும் தலைவனின் ஒழுக்கக்கேடு அவனுடைய மரியாதையை குலைக்கிறது என்பது பொருளாகும்.

அ.பொ.

அரக்கு-செந்நிறம். ஆம்மல்-செங்குமுதம். ஒருக்கார்ந்த-ஒன்றாகக் கலந்த. ஒலித்து-தழைத்து. ஆர-மிக. குத்தும்-நெருங்கி

இருக்கும். செருக்கு ஆர்-மகிழ்ச்சி பொருந்திய. இல்-வீடு. வாரால்-வரவேண்டாம்.

நான் எச்சில் பண்டம் ஆகிவிட்டேன்

12. கொக்கார் வளவயல் ஊரன் குளிர்சாந்தம்
மிக்க வனமுலை புல்லான் பொலிவுடைத்தர
தக்கயாழ்ப் பாண! தளர்முலையாய் மூத்தமைந்தார்
உத்தரம் வேண்டா வால்.

விளக்கவுரை

கொக்குகள் மிருந்து மீன் மேயும் நீர்வளம் உடைய வயல்கள் நிறைந்த மருத நிலத் தலைவன் இனி என்னை விரும்பமாட்டான். ஏனெனில் தளர்ந்த மார்பகங்களும், முதிர்ந்த உடலுமாக உள்ள நான் அவனுக்கு எச்சில் பண்டம் ஆகிவிட்டேன். பரத்தையர் இள மார்பையே விரும்பும் அந்த தலைவனுக்கு ஏற்ப நடந்து கொள்ளும் பாணனே, நீயும் இனி இங்கே வரவேண்டாம் என்று தலைவி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவி இளமையாக இருந்தபோது வந்த தலைவன் அவன் முதுமை நிலை கண்டு ஒதுக்கி விட்டான். இது உண்மையான அன்பு அல்ல. உடல் பசியை தீர்ப்பதற்காக உண்டான அன்பு. இந்த அன்புக்கு மதிப்பு இல்லை எந்த நிலையிலும் மாறாத அன்புதான் தெய்வீகம் அந்த தெய்வீக அன்பு சிலரிடம் உண்டு. அந்த சிலரே தெய்வீகத்தை நோக்கி பயணம் செய்கிறவர்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடலே அமைந்துள்ளது.

அ.பொ.

கொக்கு ஆர்-கொக்குகள் நிறைந்த. சாந்தம்-சந்தனக் கலவை. புல்லான்-தழுவாமல். பொலிவு-எழில். தக்த-தக்க. மூத்தமைதல்-முதுமை அடைதல். உத்தரம்-எச்சில்.

நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம்

தோழி... என் உடல் நோயை தலைவர்க்கு சொல்வாயாக...!

1. நாவாய் வழங்கு நளிதிரைத் தண்கடலுள்
ஓவா கலந்தார்க்கும் ஒல்லென் இறாக்குப்பைப்
பாவாரம் சேர்ப்பதற்கு உரையாய் பரியாது
நோயாள் நுணுகிய வாறு.

விளக்கவுரை

மரக்கலங்கள் போய்வரும் அலைகள் நிறைந்த குளிர்ந்த நீருடைய சமுத்திரத்தில் ஓயாது 'ஒல்' என்று ஒலி எழுப்பு கிறது. இறால் மீன்கள் நிறைந்த பரந்த கடற்கரையை உடைய நெய்தல் நிலத் தலைவனுக்கு தோழியே... நீ சென்று கூறுவாய். தலைவனின் பிரிவு துயர்தாங்கமுடியாமல் நான் உடல் மெலிந்து போனதை அவருக்கு தெரிவிப்பாய். தலைவி சொல்வதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

காதல் பிரிவு என்பது உடலை மெலியச் செய்யும். இதற்கு மருந்து கிடையாது. தலைவனை நேரில் காண்பதே சரியான மருந்து. இதுவரை கைந்நிலையில் தலைவன் பிரிவால் தலைவி வருந்துவது, தலைவனின் ஒழுக்கக்கேட்டால் தலைவி கோபம் கொள்வது. தலைவி உடலில் பசலை படர்வது போன்ற செய்திகள் திரும்ப, திரும்ப கூறப்பட்டன. இந்த இலக்கியத்தால் மனித சமுதாயத்திற்கு என்ன பலன்...? தலைவன் ஒழுக்கக் கேடனாக இருந்தால் அவனை எல்லோ ரும் வெறுப்பார்கள். உண்மையான அன்பு இருவரிடையே இருந்தால் அவர்கள் தெய்வீகத்தை நோக்கி பயணம் செய்கிறவர்கள் என்பது உணர்த்தப்படுகிறது. உண்மையான அன்பு எப்படி வருகிறது. நல்வினைகள் மிகும்போது பொறுமை, உண்மையான அன்பு வருகிறது. ஆகவே, நல்ல

செயல்களை நாம் செய்ய வேண்டும். காதலாக இருந்தாலும் சரி... அல்லது வேறு எந்த உறவு முறையாக இருந்தாலும் உண்மையான அன்பை செலுத்தவே நாம் வந்திருக்கிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந் துள்ளது.

அ.பொ.

நாவாய்-மரக்கலம். வழங்கும்-சென்றுவரும். நளிதிரை-மிகுந்த அலை. ஓவா-ஓயாது. ஆர்க்கும்-ஒலிக்கும். இறாக் குப்பை-இறால் மீன் கூட்டம். பாவாரம்-பரந்த. சேர்ப்பன-நெய்தல் நிலத் தலைவன். உரையாய்-கூறுவாய். பரியாது-தாங்காது. நுணுகியவாறு-மெலிந்த தன்மை.

நாரையே... நீ சென்று கூறு

2. நெடுங்கடல் சேர்ப்ப நின்னோடு உரையேன்
ஒடுங்கு மடற்பெண்ணை அன்றிற்கும் சொல்லேன்
கடும்சூளில் தான்கண்டு கானலுள் மேயும்
தடந்தாள் மடநாராய் கேள்.

விளக்கவுரை

நீண்டு பரந்த கடற்கரையை உடைய நெய்தல் நிலத் தலைவனே... உனக்கொன்றும் நான் சொல்லமாட்டேன். விரிந்த பனை ஓலைகளையுடைய பனைமரத்தில் சென்று தங்கும் அன்றில் பறவையிடமும் கூறமாட்டேன். நானும் தலைவனும் கூடி மகிழ்ந்தபோது உன்னை ஒருபோதும் பிரியமாட்டேன் என்றும், பிரிந்து உயிர் வாழமாட்டேன் என்றும் தலைவன் தந்த வாக்குறுதிகளை உனக்கு கூறுகிறேன். கடற்கரை சோலைகளில் மேய்ந்திருந்த உயர்ந்த கால்க ளுடைய இளமையான நாரையே உன்னிடம் கூறுகிறேன். நீ போய் தலைவனிடம் இதைக் கேள். என்று நாரையிடம் சொல்வதாக. இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவனிடம் நான் கூறமாட்டேன் என்று தலைவி சொல்கிறாள். அவனுக்கு கூறவேண்டும் என்ற அவசியமில்லை. அவன் சொன்ன வார்த்தைகள் அவனுக்குத் தெரியும். தெரிந்தும் தலைவியை அவன் புறக்கணிப்பதால் தலைவி அப்படி சொல்கிறாள். அன்றில் பறவைக்கு தலைவன் கூறியது தெரியாது. ஆகவே, அன்றில் பறவையிடமும் சொல்லமாட்டேன் என்று கூறுகிறாள். தலைவன் வாக்குறுதி

தந்த அந்த காலத்தில் சோலைகளில் மேய்ந்து கொண்டிருந்த நாரை அறிந்திருந்தன. ஆகவே, நாரையே... நீ சென்று தலைவனிடம் நியாயத்தை கூறு என்று தலைவி கூறுகிறாள்.

அ.பொ.

சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலைவன். உரையேன்-கூறேன். ஒடுங்கு-தங்கும். மடல்-ஓலை. பெண்ணை-பனைமரம். அன்றில்-ஒரு பறவை (ஆணும், பெண்ணும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது என்று சொல்வார்கள்). கடும் சூள்-மாறாத வாக்குறுதி. காலை-கடற்கரை சோலை. தடம்-உயர்வு. தான்-கால். மடம்-இளமை. நாரை-ஒரு பறவை.

துணிவுடைத் தலைவனிடம் நீ தூது செல் நாரையே...

3. மணிநிற நெய்தல் மலர்புரையும் கண்ணாய்
அணிநலம் உண்டிறந்து நம் அருளாவிட்ட
துணி முந்நீர்ச் சேர்ப்பதற்குத் தூதொடு வந்த
பணிமொழிப் புள்ளே பற.

விளக்கவுரை

நீலமணி போன்ற நிறமுடைய நெய்தல் மலரை, ஒத்த என் கண்களின் அழகில் தோய்ந்து உடல் நலம் நுகர்ந்து இன்ப சுகம் கண்டான் நெய்தல்நிலத் தலைவன் அதன் பிறகு அன்பு காட்டாமல் பிரிந்து சென்ற அவனுக்கு தூது போய் இங்கு நிற்கும் நாரையே. நீ பறந்து சென்று தனித்திருக்கும் என் நிலையை கூறி தலைவனை இங்கு வர அழைத்துவா... என்று தலைவி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவி தன்மை துயரத்தில் இருந்த நேரம் அந்த நாரை அவன் முன்வந்து நின்றதால் தலைவனுக்காக தூது சொல்ல வந்த பறவை அது என்று எண்ணிக் கொண்டு தலைவி இப்படி யெல்லாம் கூறுகிறாள். புலவரின் கற்பனை நயம் இதில் வெளிப்படுகிறது போன தலைவன் திரும்பாததால் தலைவி துயரம் அடைகிறாள். இந்த செய்திகளால் மனித சமுதாயத்திற்கு என்ன பயன்? இந்த மண்ணுலகில் காதல் மட்டுமில்லை... எல்லா சொந்த பந்தங்களும் துன்பத்தையும், ஏமாற்றத்தையும் தருவதாக உள்ளன. இதுதான் வாழ்க்கையா...? இதில் உழன்று திரிந்துகொண்டேதான் இருக்கவேண்டுமா...?

ஒருபோதும் அப்படியில்லை இதையெல்லாம் கடந்த இன்பம் ஒன்று உண்டு. அதை அடைவதற்கான வழிப் பயணங்கள் தான் இவை. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல்அமைந்துள்ளது.

அ.பொ.

மணி-நீலமணி. புரை-போன்ற. கண்-கண்கள். ஆய்-ஆராய்ந்து. அணி-அழகு. உண்டிறந்து-அனுபவித்து பின் நீங்கிய. அருளா-அன்பு இல்லாத. துணி-மனத் துணிச்சல். முந்நீர்-கடல் (மழைநீர், ஆற்று நீர், ஊற்று நீர் என மூன்று நீர்). சேர்ப்பன-நெய்தல் நிலத் தலைவன். பணிமொழி-பண்வான் சொல் இனிய குரல் ஒலி. புள்-பறவை.

பழியை சொல்வேனோ? சொல்லாமலேயே இறப்பேனோ...?

4. அன்னையும் இல்கடித்தாள்யாங்கு இனியாம் என்செய்கம்
புன்னையங் கானலுள் புக்கருந்தும்-நின்னை
நினையான் துறந்த நெடுங்கழிச் சேர்ப்பதற்கு
உரையேனோ பட்ட பழி.

விளக்கவுரை

என் தாயும் அன்பில்லாமல் சுடு சொற்களைப் பேசு கிறாள். என் களவொழுக்கத்தை அவன் தெரிந்து கொண் டான்போல் தோன்றுகிறது இனி நான் என்ன செய்வேன்...? புன்னை மான்கள் நிறைந்த கடற்கரை சோலையில் உள்ள கழியில் புகுந்து அங்குள்ள மீன்களைத்தினினும் உன்னையும் கூட (நாரையைக் கூட) நினைத்துப் பார்க்காமல் பிரிந்து போனான் கடற் கால்வாய்களையுடைய நெய்தல் நிலத் தலைவன். அந்த தலைவனின் உறவால் அடைந்த பழியை எடுத்துச் சொல்வேனா? அல்லது சொல்லாமலேயே இறந்து விடுவேனா...? என்று அருகில் இருந்த நாரையிடம் தலைவி புலம்புவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அந்த காலத்தில் களவொழுக்கம் இருந்தது என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகிறது. இக்காலத்தில் திருமணம் செய்து கொள்கிறேன் என்று ஆசை வார்த்தைகள் கூறி கணவன் மனைவி போல் வாழ்ந்து விட்டு ஏமாற்றுபவர் களைப் போல் அக்காலத்திலும் தலைவியை துயர் அடை

யும்படி செய்திருக்கிறார்கள் சிலர். தோழியிடமும், நாரையிடமும் தலைவி புலம்புவதாக பாடல் கூறுகிறது. இந்த அவலங்கள் காலங்காலமாக இருந்து வருகிறது. இப்பாடல்களை கற்பனைத் திறனை காண முடிகிறது. மனித சமுதாயத்திற்கு தேவையான் நீதிகளை நாமே அறிய வேண்டிய சூழலில் தான் பாடல்கள் உள்ளன. அதனால்தான் விளக்கவுரையில் இந்த நிகழ்வுகள் அனைத்தும் நிலையான இன்பத்தை அடைவதற்கு செய்யும் பயணங்கள் என்று ஆங்காங்கே குறிப்பிட்டு வருகிறோம்.

இதன் உட்பொருளை வாசகர்கள் அறியவேண்டும். தலைவன் தலைவி நிலை... தாய், மகன் நிலை, கணவன் மனைவி நிலை. மற்ற உறவுகளின் நிலைகளிலெல்லாம் ஏதேனும் துன்பம் இருக்காது தான் செய்கிறது. முற்பிறவிகளில் செய்த கர்ம வினைகளுக்கு தகுந்தாற்போல் இதை நிலைகள் வருகின்றன. தலைவன்... தலைவியை நிலையினை மையமாக வைத்து தன் கற்பனைத் திறனை கலந்து புலவர் கைந்நிலையை தந்திருக்கறிார். எல்லா நிலைகளும், நாம் நிறை நிலையை அடையக்கூடிய பயணங்கள் என்பதை மனதில் பதிய வைத்து இந்நூலை வாசிக்க வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கடிதல்-கடுஞ்சொல் கூறல். கானல்-கடற்கரைச் சோலை. நெடுங்கழி-நீண்ட கடற்கரை கால்வாய். சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலைவன். பட்ட-அடைந்த பழிச் சொற்கள் (தலைவன் உறவால் ஏறப்பட்ட பழிச் சொல்). பழி-அலர்.

தலைவர் திரும்பி வருவாரா தோழி?

5. அலவன் வழங்கும் அடும்பு இவர்எக்கர்
நிலவு நெடுங்கானல் நீடார் துறந்தார்
புலவு மீன்குப்பை கவரும் துறைவன்
கலவான் கொல்தோழி நமக்கு.

விளக்கவுரை

நண்டுகள் திரியும் அடப்பங்கொடிகள் படர்ந்த சந்திர ஒளி பொழியும் பெருமணல் மேடுகளை உடைய கடற்கரை சோலைகளில் நீண்ட நாள் தங்காமல் சென்றார்கள்

பரதவர்கள் புலால் நாற்றம் வீசும் மீன் குவியல்களை அள்ளிக் கொண்டு வரும் கடல்துறைகள் உடைய நெய்தல், நிலத் தலைவன் மீண்டும் வந்து நம்மிடம் சேருவானா? மாட்டானா? சொல்லடி தோழி என்று தலைவி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

களவொழுக்கத்தில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் உறுதியற்ற மனநிலை கொண்டிருந்தார்கள் என்பதை கைந்நிலைப் பாடல்கள் உணர்த்துகின்றன. பொதுவாக பெண்கள் எவ்வளவு மதிநுட்பம் மிகுந்தவர்களாக இருந்தாலும் காம மயக்கத்தில் புத்தி தடுமாறுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அன்றைய காலகட்டத்தில் மட்டுமல்ல. இன்றைய காலத்திலும் அப்படித்தான் இருக்கிறது. வரப்போகும் காலத்திலும் இந்த நிலைமை தொடரத் தான் செய்யும் இறைவனின் நூதனமான விளையாட்டு என்று கூட இதனைச் சொல்லாம். ஆனால் இந்த விளையாட்டுக்களில் நாம் வெற்றி பெறவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். இதற்கு முந்தைய விளக்கவுரையில் நாம் குறிப்பிட்டிருக்கிறோம்.

தலைவன், தலைவியை விரும்புவது, தலைவி தலைவனிடம் ஆசைப்படுவது இவையெல்லாம் வெறும் உடல் கவர்ச்சியால் மட்டும் நடப்பதில்லை. ஆண், பெண் ஆகிய இருவருக்குள்ளே இருக்கும் தெய்வீக ஒளிதான் இவர்களை கவர்ந்து இருக்கிறது. உலக இயக்கம் நடைபெற இந்த கவர்ச்சி தேவைப்படுகிறது. இந்த அடிப்படை கருத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டு கைந்நிலை விளக்கவுரையை படித்தல் வேண்டும்.

அ.பொ.

அலவன்-நண்டு. அடும்பு-அடப்பங்கொடி. இவர்-படர்ந்த. எக்கர்-மணல்மேடு. கானல்-கடற்கரைச் சோலை. நீடார்-தங்கார். துறந்தார்-பிரிந்தார். புலவு-புலால் நாற்றம். குப்பை-குவியல்.

தலைவனை காணும் வழி என்ன தோழி...?

6. என்னையர் தந்த இறவுணங்கல் யாம்கடிந்து
புன்னையம் கானல் இருந்தேமாப் பொய்த்து எம்மைச்
சொல்நலம் கூறி நலன் உண்ட சேர்ப்பனை
என்னைகொல் யாம்காணு மாறு.

விளக்கவுரை

என் அப்பா, உடன் பிறந்தவர்கள் ஆகியோர் கடலில் வலைவீசிக் கொண்டு வந்து உலரப் போட்டிருக்கும் இறால் மீன்களை கொத்தித் தின்ன வரும் பறவைகளை விரட்டிக் கொண்டிருந்தனர். அப்போது புன்னை மரங்கள் நிறைந்த கடற்கரை சோலையில் நான் இருந்தேன். அங்கே வந்த நெய்தல் நிலத் தலைவன் பொய்யான ஆசை வார்த்தை களைக் கூறி என்னோடு கூடி இன்ப நலம் துய்த்தான். இப்போது பிரிந்து போயுள்ளான். இனி அவனைக் காணும் வழி என்ன? என்பதை கூறுவாய் தோழி... என்று தலைவி வினவுவதுபோல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவியின் அப்பாவும், உடன் பிறந்தவர்களும் உலரப் போட்ட இறால் மீன்களை கொத்தவரும் பறவைகளை விரட்ட போனார்கள். அந்த சமயம் புன்னை மரத்தின் அருகில் இருந்த தலைவியை ஏமாற்றி இன்பம் துய்த்தால் நெய்தல் தலைவன். புலவரின் கற்பனை திறனுக்கு மற்று மொரு எடுத்துக்காட்டு இப்பாடல் உள்ளது. தன் வீட்டுப் பெண் களங்கப்படப்போகிறாள் என்று அறியாத தலைவியின் உறவினர்கள் இறால் மீன்களைக் காக்க போய்விட்டார்கள். தலைவி தன் பெண்மையை அந்த சமயம் பறிகொடுத்தான். தலைவனை விரட்டாமல் பறவையை விரட்ட உறவினர்கள் சென்றார்கள் என்பதில் புலவர்கள் கற்பனை நயம் வெளிப் படுகிறது.

அ.பொ.

என்னையர்-என் அப்பா. தந்த-பிடித்து வந்த. இறா-இறால் மீன். உணங்கல்-வற்றல், கருவாடு. அம்-அழகிய. பொய்த்து-பொய் யாக. என்னை-எப்படி. காணுமாறு-கண்டடைவது.

தலைவன் கூடியதால் கைவளை கழன்றது

7. கொக்கார் கொடுங்கழிக் கூடுநீர்த் தண்சேர்ப்பன்
நக்காங்கு அசதி நனிஆடி-தக்க
பொருகயல் கண்ணினாய் புல்லான் விடினே
இருகையும் நில்லா வளை.

விளக்கவுரை

கொக்குகள் மிகுந்திருக்கும், வளைந்தோடும் கடற் கரைக் கால்வாய்களுடன் கூடிய குளிர்ந்த நீர் பரப்புடைய

நெய்தல் நிலத் தலைவன் சிரிக்க, சிரிக்க பேசி என்னோடு விளையாடினான். கூடி மகிழ்ந்தான். அவன் என்னைத் தழுவி கூடாதிருந்தால் என் கை வளையல்கள் கழலாது இருந்திருக்கும். என்னோடு கூடி மகிழ்ந்தவன் இப்போது பிரிந்ததால் என் இரு கை வளையல்களும் கழன்று விடுகின்றன. மீனை ஒத்த கண்களை உடைய தோழியே... இதற்கு நான் என்ன செய்வேன்? என்ற பொருளில் தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கொக்குஆர்-கொக்குகள் நிறைந்த. கொடும-வளைந்த. கழி-கடல் நீர்க் கால்வாய். நக்குஆங்கு-அங்கே சிரித்துப் பேசி. நனி-மிக. அசதி ஆடி-விளையாடி. தக்க-ஏற்ற. பொரு-ஒத்த. கயல்-மீன். புல்லுதல்-தழுவுதல்.

போனவன் போனவன் தானா தோழி...?

8\. நுரைதரும் ஓதம் கடந்தெமர் தந்த
கருங்கரை வன்மீன் கவரும்புள் ஓப்பின்
புகர்இல்லோம் யாம்இருப்பப் பூங்கழிச் சேர்ப்பன்
நுகர்வனன் உண்டான் நலம்.

விளக்கவுரை

நுரை பொங்கும் அலைகள் வீசும் சமுத்திரத்தைக் கடந்து என்னைச் சேர்ந்த உறவினர்கள், பெரிய கரைக்கு கொண்டு வந்து சேர்த்த வலிய மீன்களை உலர்த்தினார்கள். அப்போது பறவைகள் மீனை கொத்தி செல்லாதிருக்க அவற்றை விரட்டும வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். ஒரு பாவமும் அறியாத என்னிடம் வந்த நெய்தல் நிலத் தலைவன் (கடற்கரைக் கால்வாய்களையுடைய நெய்தல் நிலத் தலைவன்) என் அழகை பருகினான். இன்பம் துய்த்தான். அவ்வாறு செய்து போன அவன் போனவன் போனவன் தானா? இல்லை மீண்டும் வருவானா...? எசால் தொழி... என்று தலைவி விளைவதுபோல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

நுரை-கடல் நுரை. ஓதம்-அலைகடல். எமர்-அப்பா. உடன் பிறந்தார்-உறவினர்கள். கவரும்-எடுத்துச் செல்லும். புள்-பறவை. ஒப்ப-ஓட்ட. புகர-குற்றம். பூங்கழி-அழகிய உப்பங்கழி.

இரவுக் குறி பற்றி தோழி கூறுவது

9. கொடுவாய்ப் புணர்அன்றில் கொய்மடல் பெண்ணைத்
தடவுக் கிளைபயிரும் தண்கடல் சேர்ப்பன்
நிலவுக் கொடுங்கழி நீந்திநம் முன்றில்
புலவுத் திரைபொருத போழ்து.

விளக்கவுரை

வளைந்த அலகுகளையுடைய ஒன்றை விட்டு ஒன்று பிரியாது இணைந்தே இருக்கும் அன்றில் பறவைகள் ஓலைகள் வெட்டப்பட்ட குருத்தோலைகளையுடைய பனை மரத்தில் இருந்து தம் இனத்தை கூவி அழைக்கும் ஒலி கேட்கிறது. குளிர்ந்த நீர்த் துறைகளையுடைய கடல் சார்ந்த நெய்தல் நிலத் தலைவன் நிலவொலி பொழியும் வளைந் தோடும் கடற்கரைக் கால்வாயில் நீந்தி வருகின்றான். மீன் நாற்றம் வீசும் நம் முற்றத்தில கழிநீர்த் திவளைகள் விழுமாறு வந்து நிற்கும் இரவுகுறி குறித்த நேரம் இதுவே. தலைவியே... குறித்தபடி தலைவன் வந்து விட்டார் என்றே தெரிகிறது என்று தலைவிக்குத் தோழி குறிப்பால் உணர்த்துவதுபோல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவன், தலைவியை சந்திக்க இடமும், நேரமும் நிமித்தமும் குறிப்பது. இரவுக்குறி நிமித்தம் என்பது கழிக ளில் நீந்தி வரும்போது எழும் காலடி ஓசை. இது கேட்டுப பறவைகள் எழுப்பும் ஒலி, இவை இரவுக்குறி நிமித்தங்களா கும். களவொழுக்கத்தில் ஈடுபடுகிறவர்கள் மற்றவர்கள் அறியாதவாறு இடத்தையும் காலத்தையும் குறித்து வைத்து சந்திப்பார்கள். தற்கால காதலர்கள் செல்போனில் ந்த இடத்திற்கு வா... இந்த நேரத்தில் வா... என்று குறிப்பு காட்டு வது போல் அக்காலத்திலும் இரவுக் குறி என்ற பெயரில் தலைவனும், தலைவியும் சந்தித்தார்கள் என்பதை அறிகி றோம்.

அ.பொ.

கொடு-வளைந்த. வாய்-அலகு. புணர்-சேர்ந்த. கொய்மடல்-வெட்டப்பட்ட ஓலை. பெண்ணை-பனைமரம். தடவு-பெரிய. கிளை-சுற்றம். பயிரும்-ஒலி எழுப்பும். கழி-கடற்கரை கால்வாய். முன்றில்-வீட்டு முற்றம். புலவுத்திரை-மீன் நாற்றம் வீசும் அலைகடல் நீர்த்துளி. பொருத-இணைந்த. போழ்து-காலம்.

கழன்று விழும் கைவளை

10. சுறா எறிகுப்பை சுழலும் கழிஉள்
இறா எறி ஓதம்அலற இரைக்கும்
உறா அநீர்ச் சேர்ப்பனைஉள்ள இருப்பின்
பொறா அஎன் முன்கை வளை.

விளக்கவுரை

சுறா மீன்கள் எற்றி எறிய மீன்கள் சுற்றி கழன்று உப்பங் கழியினுள் விழும். இறால் மீன்களை எடுத்தெறிகின்ற கேட்பவர் அஞ்சி நடுங்க ஒலிக்கும் கடல் அலை. அத்தகைய நீர்த்துறைகள் நிறைந்த நெய்தல் நிலத் தலைவன் என்னுடன் சேராமல் பிரிந்திருப்பதைப் பொறுத்துக் கொள்ளாத என் முன் கை வளையல்கள் தாமே விழுகின்றன என்று தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

சுறா-சுறாமீன். எறி-வீசும். குப்பை-குவியல். இறா-இறால் மீன். ஓதம்-கடல். அலற-பயந்து நடுங்க. இரைக்கும்-ஒலிக்கும். உறா-கூடி உறவாடாது. உள்ள-நிறைத்து. பொறா-பொறுக்காது.

கதவை அடைத்த தாய்

11. தாழை குருகு ஈனும் தண்அம் துறைவனை
மாழை மடநோக்கின் மடமொழி நூழை
நுழையும் மடமகன் யார்கொல்? என்றுஅன்னை
புழையும் அடைத்தாள் கதவு.

விளக்கவுரை

தாழைகள் வெண்ணிறக் கொக்குகளைப் போல மடல் விரித்துப் பூக்கின்ற குளிர்ந்த அழகிய கடற்கரைத் துறைகளுடைய நம் தலைவன் நம் வீட்டுப் புறவாசல் வழியாக வந்து போவது தெரியாமல், யார் இந்த மூடன் இப்படி வந்து போவது எனக் கூறுகிறாள். தொடர்ந்து நம் தாய் நம் வீட்டுக் கதவில் உள்ள சிறிய துளையையும்கூட (நாம் அதன் வழியாகக் கூட பார்க்க இயலாதபடி) அடைத்து விட்டாள். மாவடு போன்ற மருண்ட மானின் பார்வை கொண்ட கண்களையுடைய இனிய வார்த்தைகள் பேசும் என் தலைவியே... இதை நீ அறிவாயாக... என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

தாழை-தழை மடல். குருகு-கொக்கு. ஈனும்-மலர்த்தும். அம்-அழகிய. மாழை-மாவடு. மடமொழி-இனிய வார்த்தை. நூழை-புறவாசல். மடமகன்-அறிவற்ற மூடன். புழை-துளை.

வந்து விட்டான் தலைவன் தலைவியே... நீ கவலையை விடு...

12. பொன்அம் பசலையும் தீர்ந்தது பூங்கொடி!
தென்னவன் கொற்கைக் குருகுஇரிய-மன்னரை
ஓடுபுறம் கண்ட ஒண்தாரான் தேர்இதோ
கூடல் அணைய வரவு.

விளக்கவுரை

பொன்னின் நிறம் கொண்டு உன் உடம்பில் படர்ந்த பசலை மறைந்தது. பூங்கொடி போன்ற என் தலை வியே நீ இனி வருந்த வேண்டாம். தென்னவன் பாண்டிய மன்னனின் கொற்கை மேயும் நாரைகள் எல்லாம் பயந்தோடுகின்றன. எதிர் அரசர் எல்லாம் தோற்றுப் புறங்காடி ஓட வெற்றி கண்ட, ஒளிமிக்க வாகை மாலை சூடிய தலைவன் தேர் மதுரை மாநகரை நெருங்கி வந்தாகி விட்டது. தலைவி மனம் மகிழ தோழி இச்செய்தியை கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

கைந்நிலை விளக்கவுரையில் தலைவன், தலைவி பிரிவு துயரம், பரத்தையரிடம் சென்ற தலைவன் மேல் தலைவிக்கு வெறுப்பு, இரவுக்குறி. பாணனை விரட்டியடிக்க தலைவி, பல கற்பனை வர்ணனைகள் சிறப்பாக விளக்கப்பட்டது. ஆண்... பெண் ஒருவரையொருவர் விரும்புவது உடல் கவர்ச்சியால் அல்ல. ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிற இறை ஒளியின் கவர்ச்சியே விரும்புதலுக்கு காரணம் என் பதை மீண்டும்... மீண்டும் வாசகர்களுக்கு நினைவுபடுத்து கிறோம். அந்த இறை ஒளிக்கு ஆண், பெண் வித்தியாசம் இல்லை. அதுவே நம் அனைவரையும் இயக்குகிறது. இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந் துள்ளது.

அ.பொ.

பொன்னம்-பொன் போன்ற. பசலை-தேமல். தென்னவன்-பாண்டியன். கொற்கை-துறைமுகப்பட்டினம். குருகு-நாரை. இரிய-பயந்தோட. ஓடு-ஓடும்படி. புறம்-முதுகுகாட்டி. ஒண்-ஒளி. தார்-மாலை. கூடல்-மதுரையின் பெயர். அணைய-அருகாக.

☐ ☐ ☐

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

"திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்."

– சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு
மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

"நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்."

– மருத்துவர் அன்புமணி இராமதாஸ்
தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

"பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!"

– கி.வீரமணி
தலைவர், திராவிடர் கழகம்

"நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து 'ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது' எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா."

– கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,
கிராமிய இசைக் கலைஞர்.